SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue : 11, Pages:56
June-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூன் 2023,

விலை ரூ.20/-



வைர அங்கி
02.06.2023

முத்து அங்கி
03.06.2023

தங்க அங்கி
04.06.2023

திருமலையப்ப ஸ்வாமி
ஜ்யேஷ்டாபிஷேகம்
2023, ஜூன் 02 முதல் 04 வரை

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பஞ்சகவ்யத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

### ஊர்வி நாசல் ட்ராப்ஸ்
சளி, தலைவலி தடுக்க, கண், காது & மூக்கின் செயல்பாடுகளை மேம்படுத்த...

### பூமி ஹெர்பல் ப்ளோர் க்ளீனர்
தரையைச் சுத்தப்படுத்தவும், கிருமிகளை அழிக்கவும் மற்றும் இயற்கை நறுமணத்திற்கும்...

### நந்தினி கோ அர்க்
நீண்ட நாள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

### க்ஷமா கௌ டங்க் கேக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன்படுத்தப் படுகிறது.

### பூவட்டி கௌ டங்க் லாக்ஸ்
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன் படுத்துவதால் காற்றுத் தூய்மையாகும்.

### அவனி தூப் சூர்ணம்
நறுமணமாக வரும் வாசனை நம்மை காக்கும்.

### தரணி அகர்பத்தி
பூமித்தாய் போன்று நன்மை நிறைந்தது.

### தாத்ரி சாம்பராணி கப்ஸ்
நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

### வைஷ்ணவி தூப் ஸ்டிக்ஸ்
காற்றைத் தூய்மைப்படுத்தும்.

### வாராஹி தூப் கோன்ஸ்
தூயப்புகையானது சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும்

### பிருத்வி விபூதி
ஐச்வர்யத்தைப் பெருக்கும்.

### தன்ஷிகா ஹெர்பல் டூத் பவுடர்
பற்கள் மற்றும் ஈறுகளை காக்கும்.

### ஹிரண்மை ஹெர்பல் ஃபேஸ் பேக்
அழகையும் நிறத்தையும் காக்கும்.

### மஹி ஹெர்பல் சோப்
தோலை பாதுகாக்கும்.

### கஸ்யபி ஹெர்பல் ஷாம்பு
தலைமுடியைப் பாதுகாக்கும்.

மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்கள்
0877-2277777, 2233333



தம் தத$_2$ா க்ருபயாவிஷ்டம்
அச்ருபூர்ணாகுலேக்ஷணம்|
விஷீத$_3$ந்தமித$_3$ம் வாக்யம்
உவாச மது$_4$ஸூத$_3$ந:||

ஸஞ்சயன் கூறுகிறார்–“அவ்விதம் இரக்கம் நிறைந்து நீர் நிரம்பிக் கலங்கிய கண்களுடன் சோகத்தோடுகூடிய அந்த அர்ஜுனனிடம் பகவான் மதுசூதனன் இவ்வாறு கூறினார்.”

– ஸ்ரீமத் பகவத் கீதை 2–1



சொன்னால்விரோதமிது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவிலின்கவி யானொருவர்க்கும்
கொடுக்கிலேன்
தென்னாதெனாவென்று வண்டுமுரல்
திருவேங்கடத்து
என்னானை என்னப்பன் எம்பெருமான்
உளனாகவே.

இப்போது நான் சொல்லும் ஹிதவார்த்தையானது சொல்லப்படுமாகில் உங்களுக்கு அநிஷ்டமாக இருக்கும்; ஆனாலும் உங்கள் அநர்த்தத்தைப் பொருத்திருக்க மாட்டாமையினால் சொல்லியே தீர்வேன்; காதுக் கொடுத்துக் கேளுங்கள்; வண்டுகளானவை தென்னா தென்னாவென்று ஆளத்திவைத்து ரீங்காரஞ் செய்யப்பெற்ற திருமலையிலே என்னுடைய யானை போன்றவனும் எனக்கு மஹோபகார கனுமான ஸ்வாமி என் கவிக்கு இலக்காயிருக்கும் போது எனது நாவினின்று உண்டான மதுரமான கவிகளை நான் வேறொருவருக்கும் கொடுக்க மாட்டேன்.

- நம்மாழ்வார்



# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!**
**தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"**
**சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!**

**உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்**
**மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்**

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர பிரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்



(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)

**.....சந்தா விவரங்கள்.....**

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்



ஜூன் 2023


மலர் 02 இதழ் 11



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை: வாமன அவதாரம் - முனைவர் பிரியா கிருஷ்ணன், சென்னை. | 7 |
| எம்பெருமானின் சக்தத்துவம் -டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 10 |
| ஜோதிட சாஸ்திரம் : செவ்வாய் - முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 14 |
| யோகா - டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட், கோயம்பத்தூர். | 19 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: ஞானக் கண்களால் பார்த்த சஞ்சயன் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சி. | 22 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 24 |
| "கோவிந்தா" எனும் இதயத்துடிப்பை கேட்போம் - திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 31 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் மேகங்களே! என் துயரத்தை கூறுங்கள் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 33 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருஅட்டபுயகரம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 36 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : பெரிய திருமலை நம்பி - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 39 |
| ராசிபலன்கள் : ஜூன் 2023 - டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 41 |
| ஆயுர்வேதம் : கழற்சிக்காய் - திருமதி வி. உஷா, திருப்பதி. | 42 |
| பூமி என்னும் புண்ணிய பூமி - திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 44 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன் - திரு. கிருஷ்ணதுளசி, சென்னை. | 46 |
| நீதிக்கதை : கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார் - திரு. பொ.பாலாஜி கணேஷ், சிதம்பரம். | 48 |
| சித்திரக்கதை : ஏகாதசி | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : திருமலையப்ப ஸ்வாமி (ஜ்யேஷ்டாபிஷேகம்), திருமலை.
பின்னட்டை : நம்மாழ்வார் (சித்திரம் திரு. பி. சிவபிரசாத்).




# ஆரோக்கியமான வாழ்விற்கு "யோகா"

பஞ்சபூதங்களின் தன்மையால்தான் மனிதன் படைக்கப்பட்டு இருக்கின்றான். குழந்தையாகப் பிறந்து நிலத்தில் உழன்று, உணவுப் பொருளோடு நீரைச் சேர்த்து, நெருப்பில் சமைத்து உணவாக உண்டு, காற்றை சுவாசிப்பது என ஒவ்வொரு ஜீவனின் வாழ்வு முறை அமைகின்றது. இறுதியில் பிராணமற்ற உடல் எரிக்கப்பட்டு ஆகாயத்தில் அடக்கமாகிறது. இவ்வாறு மனிதனானவன் பஞ்சபூதங்களால் உருவாகி பஞ்சபூதங்களோடு அவனது வாழ்க்கை நிகழ்கிறது.

இத்தகைய உடலை வைத்துதான் இவ்வுலகத்தில் நமக்கு இருப்பிடம் அமைகின்றது. ஒருவருக்கு எத்தகைய உயர்வான லட்சியங்கள் இருந்தாலும் அதனை அடைய உடலின் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். ஆகவே அத்தகைய உடலை பாதுகாத்து நோயில்லாமல் வாழ்வதற்கு நமக்கு நாமே நல்ல வழிமுறைகளை உருவாக்கி கொள்ளல் வேண்டும். அதற்கு முன்னோர்கள் நமக்கு அளித்த கொடையே யோகமாகும்.

மனம் பல வடிவங்களை எடுக்க விடாமல் தவிர்ப்பதே யோகமாகும். நம் மனம் எவ்வித எண்ண அலைகளுக்கும் ஆட்படாமல் அமைதியுடன் இருக்கும்போதுதான், நம் ஆழ்மனதினை நாம் முழுமையாக அறிய முடியும்.

இதனை யோகத்தை வகுத்த பதஞ்சலி முனிவரும் *"ததா த்ராஷ்டுஸ்வரூபேவஸ்தானம்"* என்கிறார். அதாவது மனதின் அலைகளை கசக்கி கவனம் செலுத்து. விழிப்புணர்வு கொள். அதன் மூலம் உணர்வுகளின் மூலத்தையும், எண்ணங்களின் மூலத்தையும் காண முடியும். மனம் அமைதியாக இருக்கும்போதுதான் நாம் இயற்கையான உண்மையை உணர முடியும். இதற்கான சிறந்த வழிமுறையே யோக முறையைக் கடைபிடித்தல் ஆகும்.

பண்டைய கால மகரிஷிகள் மனித வாழ்க்கையின் மர்மங்களையும், உயிர் பற்றிய ரகசியங்களையும் அறிந்து கொள்வதற்காக உருவாக்கியதே "யோக" மார்க்கமாகும். யோகம் எனும் சொல்லிற்கு "இணைதல்" அதாவது சிற்றறிவு படைத்த மனிதன், எல்லையில்லா பிரம்மஞானம் மிக்க பரமாத்மாவோடு இரண்டற கலத்தல் ஆகும். பண்டைய கால ரிஷிகளும் அழிவில்லா படைப்புத் தத்துவங்களில் பிரம்ம ரகசியங்களை யோக சாதனைகளின் மூலம் உணர்ந்து, அதனை அடையக் கூடிய வழிமுறைகளை மனிதகுலம் அடையும் வகையில் வகுத்தும் கொடுத்துள்ளனர்.

மனதை ஒரு நிலைபடுத்தி தான் வழிபடும் தெய்வத்தின் மீது ஏகாந்தத்தில் அமர்ந்து பக்தி செலுத்துவதும் யோக முறையே ஆகும். எல்லாவற்றையும் மறந்து உடம்பில் புற்று கட்டினால் கூட தெரியாதபடி இருந்து இறைவனை உள்ளன்போடு தியானம் செய்தால் இறைவனை அடையலாம் என்கிறது சாஸ்திரம். இப்படிப்பட்ட யோகத்தில் திறம்பட்டவர்களாக ஸ்ரீநம்மாழ்வாரையும் ஸ்ரீமந்நாத முனிகளையும் கூறலாம்.


நம்மாழ்வார் பதினாறு ஆண்டுகள் திருக்குருகூர் நம்பி ஆலயத்தின் புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனமுமின்றி தவம் செய்து வந்தார். அதேபோன்று நாதமுனிகளும் நம்மாழ்வார் முன்பாக கண்ணிநுண் சிறுதாம்பு திவ்யப் பிரபந்தத்தை பன்னீராயிரம் முறை அனுசந்தித்து நம்மாழ்வாரிடமிருந்து நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தை பெற்றார். ஸ்ரீமந்நாத முனிகள் தொடர்ந்து புரிந்த யோகத்தால்தான் நாலாயிரத் திவ்யப் பிரபந்தமே இன்று நமக்கு கிடைத்தது. எனவே தொடர்ந்து யோகம் புரிந்து வந்தால் சிந்தை தெளிந்து உடல் ஆரோக்கியம் பெற்று நன்முறையில் பரம்பொருளையும் அடைந்திடலாம்.

யோக பயிற்சியைச் செய்வோம்! தேக ஆரோக்கியத்தைப் பெறுவோம்!!

## சங்க இலக்கியங்களில் திருமால் பெருமை

# திருமாலின் வாமன அவதாரம்

-முனைவர் பிரியா கிருஷ்ணன்,
சென்னை, 7299587879



*மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.* – குறள் 610

என்று திருக்குறள் கூறும் வாமன அவதாரம் என்பது வைணவர்கள் முழுமுதற் கடவுளாகக் கருதும் திருமாலின் ஐந்தாம் அவதாரம் ஆகும். இந்த அவதாரத்தைத்தான் *"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி"* என்று ஆண்டாள் பாடி மகிழ்ந்தார். இருக்கு வேதத்திலும் திருமால் மூன்றடி அளந்தமை இடம் பெற்றுள்ளது (இருக்கு வேதம்.1.555.5).

### இந்த அவதாரத்திற்கான புராணக் கதை பின்வருமாறு:

தேவலோகத்தை மாமன்னர் பலி கைப்பற்றுதல் : அமரத்துவம் அடைய விரும்பிய தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதத்தை வரவழைத்தனர். பகவான் விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து, அமுதத்தை தேவர்களுக்குக் கிடைக்கச் செய்தார். அதன் பின்னர் ஏற்பட்டபோரில் இந்திரன் தலைமையிலான தேவர்கள் வெற்றி பெற, பலி மஹாராஜரின் தலைமையிலான அசுரர்கள் தோல்வியுற்று மரணத்தின் அருகில் சென்றனர் (ஸ்ரீமத் பாகவதத்தின் எட்டாவது காண்டத்தின் 5–12 அத்தியாயங்களை விரிவாகப் படித்தல் நன்று). பிருகு வம்சத்தில் வந்த சுக்ராசாரியர், பலி மஹாராஜரிடம் இரக்கம் கொண்டு, அவரை மீண்டும் உயிர்பெறச் செய்தார்.

தேவலோகத்தைக் கைப்பற்ற விரும்பிய மாமன்னர் பலியின் நோக்கத்தை அறிந்த பிருகு வம்ச பிராமணர்கள் அனைவரும் இணைந்து, மன்னருக்காக விஸ்வஜித் யாகத்தை நிறைவேற்றினர். யாகத்தின் பலனாக பலி பலமடங்கு வலிமை பெற்றார். மேலும், சக்தி வாய்ந்த வில், அம்பு, தெய்வீக கவசம், மஞ்சள் நிற குதிரைகள் பூட்டிய தங்க விமானம் முதலியவற்றையும் பெற்றார். அவருடைய பாட்டனாரான பிரகலாதர் என்றுமே வாடாத மலர்களைக் கொண்ட மாலையையும், சுக்ராசாரியர் உயர்ரக சங்கினையும் பரிசளித்தனர். இவை அனைத்தும் கிடைக்கப் பெற்ற பலி மஹாராஜர் மிகுந்த பராக் கிரமத்துடனும் தேஜஸுடனும் மீண்டும் தேவலோகத்தைக் கைப்பற்ற தன் பரிவாரங்களுடன் படையெடுத்தார்.

அச்சம் கொண்ட இந்திரனும் இதர தேவர்களும் தங்களின் குருவான பிரஹஸ்பதியிடம் முறையிட, அவரோ, "பலி இம்முறை பிராமணர்களின் உதவி யுடன் வந்திருப்பதால், உங்களால் அவரை வெல்ல இயலாது. சில காலம் தேவ லோகத்திலிருந்து மறைந்து வாழுங்கள்" என்று அறிவுரை கூறினார். அதன்படி தேவர்களும் தேவ லோகத்தை விட்டு மறைந்தனர். மா மன்னர் பலி தேவலோகத்தை எளிதாகக் கைப்பற்றினார்.

### வாமனரின் தோற்றம் :

மகிழ்ச்சியுற்ற பிருகு வம்ச பிராமணர்கள் பலியை நூறு அசுவமேத யாகம் செய்யும்படி அறிவுறுத்தினர்.





### திருமலையப்ப ஸ்வாமிக்கு ஜ்யேஷ்டாபிஷேகம்

சுமார் 600 ஆண்டுகள் திருமலையப்ப ஸ்வாமியின் திருமேனியினை நன்கு பாதுகாக்கும் பொருட்டு அவருக்கும், தேவியருக்கும் எப்பொழுதும் தங்கக் கவசம் அணிவிக்கப்பட்டிருப்பதால் பக்தர்கள் அவரை தங்கக் கவசத்திலேயே தரிசிக்கின்றனர். இருப்பினும் இந்தத் தங்க கவசங்களில் ஏதாவது சிறிய அளவில் பின்னம் ஏற்பட்டு இருந்தாலும் அதைச் சரி செய்து மீண்டும் அணிவிக்க வகை செய்யும் வகையில் ஆண்டு தோறும் ஜ்யேஷ்ட எனப்படும் ஆனி மாதம் ஜ்யேஷ்டாபிஷேகம் என்ற வைகானச ஆகம பரிஹார, சாந்தி ஹோமங்கள், திருமஞ்சனம், புறப்பாடு போன்றவை மூன்று நாட்களுக்கு நடைபெறுகின்றன. ஜ்யேஷ்ட (ஆனி) மாதம் ஜ்யேஷ்டா (கேட்டை) நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிய நாளன்று முடிவடையும் இந்த ஜ்யேஷ்டாபிஷேக உற்சவம் திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி ஆகிய மூன்று நாட்களுக்கு நடைபெறுகிறது.

இதற்கிடையில் தேவர்களின் தாயான அதிதி, தன்னுடைய புதல்வர்கள் மறைந்து வாழ்வதை நினைத்து மிக்க கவலையுற்று, தனது கணவர் கஷ்யப முனிவரிடம் தகுந்த உபாயத்தை வேண்டினாள். அவர், "நீ பரம புருஷனான பகவானை தியானித்து, கடுமையான பயோ விரதத்தை மேற்கொள்" என்று அறிவுறுத்தினார்.

அவளும் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் விரதத்தை மேற்கொள்ள, அவள் முன் தோன்றிய பகவான், "உன் விரதத்தின் பலனாக நான் உமக்கு மகனாகப் பிறந்து, தேவலோகத்தை மீட்டு, உன் புதல்வர்களைக் காப்பேன்" என்று உறுதியளித்தார் (ஸ்ரீமத் பாகவதத்தின் எட்டாவது காண்டத்தின் பதினாறாவது அத்தியாயத்தில் பயோ விரதம் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளலாம்).

அதன்படி, ஸ்ரவண துவாதசி அன்று கஷ்யப முனிவரின் மூலமாக அதிதியின் வயிற்றில் பகவான் தோன்றினார். அவர் பிறந்தவுடன் தேவர்களும் கின்னரர்களும் பூமாரி பொழிந்து தங்களின் ஆத்மார்த்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொண்டனர். சங்கு, சக்கரம், கதா பாணியாக பிறந்த பகவான் குள்ளமான பிராமணராக (வாமனராக) உருமாற அவருக்கு கஷ்யபரும் இதர பிராமணர்களும் உபநயனம் செய்வித்தனர்.

#### பலியை வெற்றி கொள்ளுதல்

பலி மஹாராஜரின் யாகம் முடிவடையும் தருவாயில், வாமனர் அவரது யாகசாலைக்குச் சென்றார். அங்கு குழுமியிருந்த பிராமணர்கள், அரக்கர்கள் என அனைவருமே அவருடைய அதி அற்புதமான தோற்றத்தைக் கண்டு மிகவும் வியப்புற்றனர். பலி மஹாராஜரும் மிகவும் மகிழ்ச்சி உற்று, அவரை தகுந்த ஆசனத்தில் அமர வைத்து பாத கமலங்களுக்கு அபிஷேகம் செய்தார்.

"நான் தங்களுக்காக என்ன செய்ய வேண்டும்?" என்று பலி மஹாராஜர் வினவ, வாமனர் தனக்கு வெறும் மூன்றடி நிலம் தானமாக வேண்டும் என்று யாசித்தார். பலி மஹாராஜர் அதைக் கொடுப்பதற்கு ஒப்புக் கொண்ட தருணத்தில், அவரது குருவான சுக்ராசாரியர் வந்திருப்பது சர்வ வல்லமை படைத்த பரம புருஷன் பகவான் விஷ்ணுவே எனக் கூறி தானமளிக்கக் கூடாது என அறிவுறுத்தினார்.

ஆனால் தான் கொடுத்த வாக்கினை காப்பாற்றுவேன் என்று கூறி, வாமனருக்கு தானம் கொடுப்பதற்கான சடங்குகளை நிறைவேற்றினார். உடனே, வாமனர் தன் சிறிய வடிவினை பன் மடங்காகப் பெருக்கி தனது ஒரு காலால் கீழ் உலகங்களையும்,



மற்றொரு காலால் மேலுலகங்களையும் அளந்தார். 3வது அடிக்கு என்ன செய்வதென்று வினவ, பலி மஹாராஜர் தனது சிரசின் மீது கால் பதித்து தன்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பிரார்த்தித்தார். வாமனரும் தனது திருப்பாதங்களை பலியின் சிரசில் பதித்து தனது அவதார நோக்கத்தை நிறைவேற்றினார் வாமனர்.

**வாமனரின் வடிவம்**

பகவானின் வடிவினை மனதில் நிறுத்துவதால் பரம ஆனந்தத்தை அடைய முடியும் என்று ஆசாரியர்கள் உரைத்துள்ளனர். குள்ளமான பிராமண சிறுவனின் வடிவில் தோன்றிய பகவான் வாமனருக்கு பிரஹஸ்பதி பூணூல் அணிவித்தார். பூமா தேவி மான் தோல் வழங்கினாள். கஷ்யபர் தர்ப்பைப்புல்லை அணிவித்தார். சந்திரன் பிரம்ம தண்டத்தை வழங்கினார். அதிதி தேவி உள்ளாடைகளை வழங்கினாள். சூரியன் காயத்ரி மந்திரத்தைக் கொடுத்தார். இந்திரன் குடை கொடுத்தார். பிரம்மா கமண்டலம் கொடுத்தார். சரஸ்வதி ருத்திராக்ஷ மாலையைக் கொடுத்தாள். குபேரன் பிச்சை பாத்திரத்தைக் கொடுக்க, பார்வதி அதில் முதலாவதாக பிச்சை இட்டாள். இதனை சங்கப் பாடல்கள்

*ஞாலம் மூன்று அடித்தாய முதல்வற்கு முது முறைப்*
*பால் அன்ன மேனியான் அணிபெறத் தைஇய*
*நீல நீர் உடை போலத் தகைபெற்ற வெண்*

–கலி.124:1–3

என்று கலித்தொகையும்,

*கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை* –பரி.3:20
*திணி நிலம் கடந்தக்கால், திரிந்து அயர்ந்து அகன்று ஓடி*

–பரி.3:54

என்று பரிபாடலும்,

*நனந் தலை உலகம் வளைஇ, நேமியொடு*
*வலம்புரி பொறித்த மா தாங்கு தடக் கை*
*நீர் செல, நிமிர்ந்த மாஅல், போல* –முல்லைப்பாட்டு 1–3

என்று முல்லைப் பாட்டிலும்,

*இருநிலம் கடந்த திருமறு மார்பின்* –பெரும்பாண்.29

என்று பெரும்பாணாற்றுப் படையிலும்,

*மூவுலகம் ஈரடியால் முறை நிரம்பா வகை முடியத்*
*தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து*
*சோவரணும் போர்மடியத் தொல் இலங்கை கட்டழித்த*
*சேவகன்சீர் கேளாத செவி என்ன செவியே*

–சிலம்பு ஆய்ச்சியர் குரவை

என்று சிலம்பிலும் வாமன அவதாரம் குறித்துப் பேசப் பட்டுள்ளது.

பெருமை அறிவோம்...



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையில்**
**இரத்ததானம் செய்யுங்கள்!**
**திருமலையப்பனின் இறையருள் பெறுங்கள்!!**

- இரத்தம் தானத்தால் மட்டுமே வழங்க முடியும். இரத்தம் தேவை படுபவர்களுக்கு நாம் அதை அளிப்பதன் மூலம் ஒரு உயிரையும் காப்பாற்ற முடியும்.
- கலியுக வைகுண்டமான திருமலையில் இரத்த தானம் செய்வது புண்ணியமாகும்.
- திருமலை அஸ்வினி மருத்துவமனையில் தினமும் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை இரத்த தானம் அளிக்கலாம்.

தொலைபேசி எண் : 0877-2263601

இரத்தம் தானம் செய்யுங்கள்!
ஆபத்தில் உள்ளோரைக் காத்திடுங்கள்!!



# எம்பெருமானின் சக்தத்துவம்

– டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி,
99855 99669.

**முன்னுரை**

பகவான்! *''பாமருமூவுலகும் படைத்து''* (7.6), "வார்த்தையறிபவர் மாயவர்கந்றியாவரே" என்னும் திருவாய்மொழியில் நம்மாழ்வார் அவனுடைய குணம், அழகு, ஜகத்காரணத்துவம் முதலியவற்றை மனத்தால் அனுபவித்து அவனுடைய சக்தத்துவத்தை நினைத்து மனமுருகிக் கூப்பிடுகிறார்.

*''கற்பாரிராமபிரானை யல்லால் மற்றுங்கற்பரோ''* (7.5), என்று படர்க்கையிலேயே உபதேசிக்கிறார். இப்பதிகத்தில் முன்னிலைப்படுத்திப் பேசுவதாக அமைந்துள்ளது. எம்பெருமானை முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை தமக்கு இருந்த போதிலும் அவ்வனுபவம் தமக்குக் கிடைக்கப் பெறாமையாலே தம்முடைய ஆர்த்தி எல்லாம் தோற்றப் பரமபதநாதனை அவன் செவியளவும் கேட்கும்படிப் பெருமிடறு செய்து கூப்பிடுகிறார் அம்மங்கியாழ்வான் என்னும் ஆசாரியர்.

ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் செல்கின்ற ஆர்த்தியை நம்மால் சொல்ல முடியாது என்கிறார்."இத்திருவாய் மொழி பாடக்கேட்டு அனுபவித்துப் போருமிதுக்கு மேற்படி இதிலோடுகிற ஆர்த்திக்கு நம்மால் பாசுரமிட்டுச் சொல்லப்போகாது என்று பணிக்கும்" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

ஆழ்வாருக்கு செல்கின்ற ஆர்த்தி இப்படிப்பட்டது என்று எடுத்து உரைக்க நாம் அதிகாரிகளல்லோம் என்பாராம். எம்பெருமானுடைய சக்தத்துவம், பரமன், ரக்ஷகன், ஜகத்காரணன், ஆச்ரிதபவ்யன், சீலவான், வடிவழகு, அந்தர்யாமித்துவம், விரோதி நிரஸனன், சதர்ஜத்துவன், திருவிளையாடல் என்னும் தலைப்பில் அமைந்துள்ளதை அனுபவிப்போம்.

**பரமன்**

முதலில் நான்முகனைப் படைத்த வரலாற்றைப் பேசுகிறார்.

*''பாமருமூவுலகும் படைத்த பத்பநாபாவோ*
*பாமருமூவுலகுமளந்த பற்பபாதாவோ*
*தாமரைக் கண்ணாவோ தனியேன் தனியாளாவோ*
*தாமரைக் கையாவோ உன்னையென்று கொல் சேர்வதுவே?.''*



உலகம் உய்வதற்காக எம்பெருமான் தன் உந்தியில் பிரமனைத் தோற்றுவித்தான்.

*“ஊழி தோறூழி பல ஆலினிலையதன் மேல்*
*பையஉடயோகு துயில் கொண்ட பரம்பரனே*
*பங்கய நீள்நயனத்தஞ்சனமேனியனே”*

என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்கிறார் (பெரியா. திரு.1.5.1). அந்த நாபிக் கமலமே பிரமனைப் படைக்க மூவுலகும் படைக்கப்பட்டதாம்.

எம்பெருமானுடைய பரத்துவத்தை நிர்ணயிக்க வேறு பிரமாணங்களும் தேவையில்லை என்றபடி. அந்த நாபிக்கமலமே எம்பெருமானே பரமன் என்று காட்டிக் கொடுக்கின்றதாம்.

நம்மாழ்வாரும் இதனை வலியுறுத்துகிறார்.

*“முதலாம் திருவுருவம் மூன்றென்பர் ஒன்றே*
*முதலாகும் மூன்றுக்கு மென்பர் - முதல்வா*
*நிகரிலகு காருருவா நின்கைத்ததன்றே*
*புகரிலகு தாமரையின் பூ”*

–பெரிய. திருவந்.72

பிரமன், விஷ்ணு, சிவன் என்கிற மூவரும் ஒருவரே என்றும், மூவருள்ளும் ஒருவரே முதல்வன் என்றும், மூவருக்கும் மேலான ஒருவனே முதல்வன் என்று நான்காமவரைச் சொல்வார்களாம்.

ஆனால் தாமரைப் பூவானது விஷ்ணுவே பரமன், முதல்வன் என்று ஸ்ரீமந் நாராயணனைக் காட்டுகின்றதாம். இதே கருத்தை ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தின் ஒரு சுலோகத்தை எடுத்துக் காட்டுகிறார் காஞ்சி ஸ்வாமி.

*“த்ரேயோ தேவாஸ்துல்யாஸ் த்ரிதயமிதமத்*
*வைததமதிகம்*
*த்ரிகாதஸ்மாத் தத்த்வம் பரமிதி விதர்க்காந்*
*விகடயந்*
*விபோர்நாபீ பத்மோ விதி சிவநிதாநம் பகவத:*
*ததந்யத் ப்ரூபங்கீ பரவதிதிஸித்தாலந்தயதி ந:”*

அடுத்ததாக, படைத்த உலகங்களைப் பறித்துக் கொள்ள, அவற்றை மீட்டுக் கொண்ட திருவடியைச் சொல்லுகிறார். *“அடிச்சியோம் தலைமிளச நீ யணியாய்”* (திருவாய் 3.6) என்றும், நின்பாத பங்கயமே தலைக்கணியாய் (திருவாய்) என்றும் தான் ஆசைப்பட்டிருக்க, ஆசையில்லாதார் தலையிலே திருவடியை வைத்ததைப் பார்த்து ஆழ்வார் மனம் வெதும்புகிறார். மேலும், எம்பெருமான் திருக்கண்களை ஆழ்வார் அனுபவிக்கிறார்.

அதாவது படைத்தல், காத்தல், அழித்தலாகிய தொழில்களை அவனுடைய தாமரைக் கண்களே செய்கின்றனவாம். ஆழ்வார் திருவிருத்தத்தில்

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*ததஸ்ஸமாலோச்ய ஸஹாந்தரங்கை$_3$: ப்ரலோப்$_4$ய*
*ராமாநுஜமப்யுபாயை: ।*
*ஸ ஜாஹ்நவீஸ்நாநநிமித்தயாத்ராவ்யாஜேந ஹந்தும்*
*குமதி: ப்ரதஸ்தே$_2$ ॥*
(23)



**அதன் பிறகு, துஷ்டபுத்தியையுடைய யாதவர் அந்தரங்கர்களோடு கூடிச் சதியாலோசனை செய்து, ராமாநுஜரையும் தந்திரோபாயங்களாலே மயக்கி, கங்காஸ்நானத்தின் பொருட்டுக் காசியாத்திரை செய்யும் வியாஜத்தையிட்டு அவரையும் அழைத்துக் கொண்டு, அவரைக் கொலை செய்வதற்காகப் புறப்பட்டார்.**

– “ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது

“பெருங்கேழலார் தம் பெருங் கண் மலர்ப் புண்டரீகம் நம் மேல் ஒருங்கே பிறழ வைத்தார் இவ்வ காலம்...” என்று ரக்ஷியத்திளைவன்றிறே ரக்ஷகனுடைய பாரிப்பிருக்கிறபடி என்கிறார் பெரிய வாச்சான் பிள்ளை. இவ்விருள் தருமா ஞாலத்தில் தான் “அத்விதீயன்” என்கிறார். அப்படிப்பட்டவனை கூடுவது எப்போது என்கிறார்.

*“ஸோப்யே நம் த்வஜ*
*வஜ்ராப்ஜக்குத சிஹ்நேந*
*பாணிநா*
*ஸம்ஸப்ருச்யாக்ருஷ்ய ச ப்ரீத்*
*யாநுகாடம்பரிஷிஸ்வஜே”*
(பாரதம்)

அதாவது அக்ரூரனைக் கையால் தொட்டு அணைத்தானாய், ஆனால் அவன் உணர்ச்சி இல்லாதவனாய் நிற்கையாலே கையைப் பிடித்து எழுப்ப மீண்டும் அணைத்தான் என்பதாம். மேலும் கண்டா கண்ணுள் விஷயமாகவும் நம்மாழ்வார் தெரிவிக்கிறார்.

சக்ரவர்த்தி திருமகன் பதினான்கு ஆண்டு வனவாசம் முடிந்து பஞ்சமி திதியில் பரத்வாஜ ஆச்ரமத்தை அடைந்து பக்தியோடு முனிவரை நமஸ்கரித்தாளும் (ஜீவிஷ். 4.5.1.7.26) இவ்வளவுக்கும் தான் அருகதை இல்லையோ என்று எம்பெருமானைக் கேட்கிறார் ஆழ்வார். *“ஒண் டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்டு வைக் கையாலே! உன்னைச் சேர”* என்ற போதே தன்னுடைய வருமிறே” என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி.

## கண்ணன் கருத்துரை



*யம் யம் வாபி ஸ்மரன்பாவம் த்யஜத்யந்தே*
*கலேவரம் ।*
*தம் தமேவைதி கௌந்தேய ஸதா*
*தத்பாவபாவித: ॥*
(8-6)

**இறுதி நாளில் இந்த உடம்பை விட்டுப் போகும் போது எவன் எதை நினைத்துக் கொண்டிருக்கிறனோ அவன் எப்பொழுதும் அதனையே எண்ணி அடுத்துவரும் பிறவியில் அந்த வடிவையே அடைகிறான்.**

தொகுப்பு : பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.

## ரக்ஷகன்

திருக்கையின் ஸ்பர்சமதனைவிரும்பி, “என்று கொல்” (எப்போது) என்றார் சென்ற பாசுரத்தில். அதற்கு மறு மொழியில்லாமையாலே என்று கொல் (என்னே!) என்கிறார்

இப்பாசுரத்தில், *“என்று கொல் சேர்வ தந்தோ அரன் நான்முக னேத்தும் செய்ய, நின் திருபாதத்தை யான் நிலம்நீரெரி கால் விண்ணுயிர், என் றிவை தாம் முதலாமுற்று மாய் நின்ற எந்தாயோ, குன்றெடுத்து ஆநிரை மேய்த்து அவைகாத்த எம்கூத்தாவோ”* தங்களுடைய தொழில்களில் அந்யபரங்களான பிரமனும் சிவனும் ஆசைப்படுகின்றனர். அநந்யவரனான தான் அத்திருவடிகளை எப்போது பெறுவது? என்கிறார்.

ஆக்கலிலும், அழித்தலிலும் வேறுபாடில்லாது அவர்களின் மனதில் உறைந்து எம்பெருமானே செய்கின்றானாம். “முற்றுமாய் நின்ற” என்பதாலே சித்தும் அசித்தும் ஒன்றயச் சேர்ந்து வருவதைச் சொல்கிறார். இந்திரன், கல்மழை பொழிப்பித்தபோது பசுக்கூட்டங்களைக் காக்க மலையை எடுத்து ரக்ஷித்தான்.

அப்போது அவன் தன் திருவடிகளைக் குஞ்சித்ததை (மடித்ததை)ப் பார்த்த படியாலே தன்னை (ஆழ்வார்) ஈர்க்கப்பட்டதனால் “எங்கூத்தாவோ” என்கிறார். இப்பாசுரத்தில் ப்ராயகத்துவத்தைச் சொல்லுகிறார். குன்றெடுத்து ஆநிரையைக் காத்து ரக்ஷித்தானாகையாலே எம்பெருமானே ரக்ஷகன் என்றபடி.

## ஜகத்காரணன்

கோவர்த்தன மலையை எடுத்ததைச் சொல்லிய பின்னர் மீண்டும் “காத்தவெங்கூத்தாவே மலையேந்திக் கல்மாரிதன்னை” என்று கூறுவது எம்பெருமானின் சக்தத்துவத்தில் ஈடுபட்டுச் சொல்வதாம்.

*“காத்த எங்கூத்தாவோ மலையேந்திக் கல்மாரி தன்னை*
*பூத்தண் துழாய் முடியாய் புனைகொன்றையஞ் செஞ்சடையாய்*

*வாய்த்த என்நான் முகனே வந்து என்னாருயிர் நீயானால்*
*ஏத்தரும்கீர்த்தியினாய் உன்னை எங்குத் தலைப்பெய்வனே?''*

"கல்லாலே வர்ஷிக்கையாலே மலையை எடுத்துப் பரிகரித்தான். நீராலே வர்ஷித்ததாகில் கடலையெடுத்து நோக்குங்காணும்" என்ற நம்பிள்ளை நயமாக எடுத்துரைக்கிறார்.

இதனால் இன்னதைக் கொண்டு இன்ன காரியம் செய்வது என்கிற நியதி எம்பெருமானுக்கில்லை என்பதாம். ஆழ்வார் தனக்காக மலையை எடுக்க வேண்டுவதில்லை. மலையை எடுத்தத் தோள் களைக் காட்டினாலே போதுமென்கிறார்.

*"உபாதத்தே ஸத்தாஸ்தி திநியநாத்யை ச்சித சிதௌ*
*ஸ்வமுத்திச்ய ஸ்ரீமாநிதிவததிவாகௌபநிஷதீ உபயோபேயத்வே*
*ததிஹதவ தத்த்வம் நது ருணௌ*
*அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேசய சரணமங்யாஜம பஜம்''*

–ஸ்ரீரங்.ஸ்த.2.8.7

என்னும் சுலோகத்தைப் பெரிய வாச்சான் பிள்ளை எடுத்து இயம்புகிறார். அதாவது எல்லாம் எம்பெருமானிட்ட வழக்காயிருக்கும் என்பதாம். தான் அநந்ய பரனாயிருந்தும் "ஏத்தும்" (ஏத்துவேன்) என்னால் அது தன்னால் எப்படி முடியும்? தான் ஓர் உபாயம் செய்து அவனைக் கிட்டுவது தன்னால் முடியாது என்பதைச் சொல்லி எம்பெருமானுடைய ஜகத்காரணத்துவத்தைப் பேசுகிறார்.

### ஆச்ரித பவ்யன்

எம்பெருமானுடைய ஜகத்துவத்தைச் சொன்ன ஆழ்வார் அவன் மூவுலகங்களிலுமுள்ள பதார்த்தங்கள் யாவும் எம்பெருமானுடைய அதீனம் என்பதை நிலை நாட்டுகிறார்.

*"எங்குத் தலைப்பெய்வன்நான் எழில் மூவுலகும் நீயே*
*அங்குயர் முக்கண்பிரான் பிரமபெருமானவன் நீ*
*வெங்கதிர் வச்சிரத்தை இந்திரன் முதலாத்தெய்வம் நீ*
*கொங்கலர் தண்ணந்துழாய் முடி என்னுடைக் கோவலனே''*

சிவபிரானுடைய உயர்த்தியும், பிரமனுடைய மேன்மையும் எம்பெருமானுடையதேயாம். வஜ்ராயு தனை இந்திரனுள்ளிட்ட அனைத்து தேவதைகளும் அவனது ஆட்சிக்குட்பட்டதே.

ஆச்ரிதபவ்யரான கிருஷ்ணனை விளித்து "கொங் கலர் தண்ணந்துழாய்" என்கையாலே போக்யமான ஆனந்தத்தைச் சொல்லிற்றாகவுமாம்.

"என் கோவலனே" என்பதால் பணிந்திருக்கும் தன்மை வெளிப்படுகிறது. தன்னுடைய இடையூறு களைப் போக்கித் தன்னை (ஆழ்வார்) அவன் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து என்பர் ஸ்ரீகாஞ்சி சுவாமி.

தொடரும்....



## மங்கள சுலோகங்கள்

*நந்தகோபகுமார நவநீதததிசோர ।*
*நாராயண நாராயண நாராயண*
*நாராயண ஜய கோபாலஹரே ॥*

**நந்தகோபரின் மைந்தனே!**
**வெண்ணெய், தயிர் திருடுபவனே!**
**நாராயணா! கோபால! ஹரி! (உனக்கு) வெற்றி!**



ஜோதிட சாஸ்திரம்

# செவ்வாய்

சென்ற இதழின் தொடர்ச்சி...

- முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை, 97862 80577.

நவக்கிரகங்களில் ஒருவரான செவ்வாய் மங்களகரமான வாழ்வை அருள்பவர். தைரியம், வலிமை, பெருந்தன்மை, கண்டிப்பு, வைராக்கியம், பகைவரை எதிர்க்கும் ஆற்றல் ஆகியவற்றை கொடுப்பவரும் இவரே. இவருக்கான ஆலயங்களை சற்று தரிசிப்போம்.

**செவ்வாய் தலமான உஜ்ஜைனி மங்கள நாதர் கோயில்**

மத்திய பிரதேசத்தின் தலைநகரான உஜ்ஜைனில் அமைந்துள்ள மங்களநாதர் சிவாலயம், செவ்வாய் அவதரித்த தலமாகும். இதனால் இது அங்காரக திருத்தலம் என்றும் அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வைத்தீஸ்வரன் கோயில் செவ்வாய் தலமாக கருதப்படுகிறது. நாட்டின் பல இடங்களில் செவ்வாய்க்கு கோயில்கள் இருந்தாலும், செவ்வாய் பிறந்த தலமாக உஜ்ஜைனி மங்களநாதர் கோயில் உள்ளதால் இங்கு செவ்வாய் பகவானின் வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பொதுவாக சிவன் கோயில்களில் மூலவருக்கு எதிரில் நந்தி சிலை இருக்கும். ஆனால் இங்கு மங்களநாதர் முன்பு செவ்வாய் பகவானின் வாகனமாகக் கருதப்படும் ஆடு உருவம் வைக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் ஜாதகத்தில் லக்னத்தில் 4,7,8,12 இடங்களில் செவ்வாய் இருந்தால், அது தோஷமாக கருதப்படுகிறது. இதனால் அந்த ஜாதகருக்கு திருமணத் தடை ஏற்படும். விபத்து நேரிடும். அடிக்கடி காயம் ஏற்படும் என்கிறது ஜோதிட பலன். இந்த தோஷ நிவர்த்திக்காக மக்கள் செவ்வாய் தலத்திற்குச் சென்று செவ்வாய்க்கிழமைகளில் விரதம் இருந்து பரிகார பூஜைகள் செய்கின்றனர்.

**வைத்தீஸ்வரன் கோயில்**

சோழ வளநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் வடகரைத் தலங்களில் 16வது தலமான இத்திருத்தலம் இந்திய இருப்புப் பாதையில் வைத்தீஸ்வரன் கோயில் எனும் பெயருடன் புகைவண்டி நிலையமாகவும் அமைந்துள்ளது.

**கோயில் அமைப்பு :**

நான்கு கோபுரங்களுடனும் உயர்ந்த மதில்களோடும் கூடிய கோயில். மேற்கு நோக்கி இறைவன் சந்நிதி அமைந்துள்ளது. அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. *''தெற்கில் கணேசன் திகழ் மேற்கில் பைரவரும், தொக்கவடக்கில் தொடர் காளி மிக்க கிழக்கு உள்ளிருக்கும் வீரனையும் உற்றுப் பணிந்துய்ந்தேன். புள்ளிருக்கு வேளூரிற் போய்''* எனும் பாடலின் மூலம் வைத்தியநாத ஸ்வாமி ஆலயத்தைத் தெற்கில் கணபதியும், மேற்கில் பைரவரும், வடக்கில் காளியும், கிழக்கில் வீரபத்திரரும் காவல் புரிகின்றனர் என்று அறியலாம்.

**தீர்த்தம் :**

கோயிலுக்குள் விளங்கும் சித்தாமிர்த தீர்த்தம் விசேஷமானது. இங்கே கிருத யுகத்தில் காமதேனு இறைவனைத் தன் முலைப்பால் கொண்டு திருமஞ்சனம் ஆட்டிய சம்பவம் நிகழ்ந்தது. அதுவே புனித தீர்த்தமாகப் பெருகி இங்கு அமைந்ததென்பர். இதன்

காரணமாக கோக்ஷர தீர்த்தம் என்று பெயர் பெறலாயிற்று. சதானந்த முனிவர் இங்கு தவம் செய்து கொண்டிருந்தபோது பாம்பால் துரத்தப் பெற்ற தவளை ஒன்று தண்ணீரில் குதித்து அவர் தவத்தை கலைத்தது.

முனிவர் குளத்தில் பாம்பும் தவளையும் வாசஞ்செய்யக்கூடாது என்று சபித்ததால் இக்குளத்தில் தவளைகள் வசிப்பதில்லை என்பர். இத்திருக் குளத்தில் குளித்தெழுந்தால் சகல நோய்களும் தீரும் என்பது திண்ணம். நோய் தீர குளத்தில் வெல்லம் கரைத்து விடுவதும், பிரகாரத்தில் உள்ள மரப்பெட்டியில் உப்பு, மிளகு இரண்டையும் கலந்து கொட்டுவதும் இன்றும் உள்ள ஒரு பிரார்த்தனை.

**மூர்த்திகள் :**

ஸ்வாமி பெயர் ஸ்ரீவைத்தியநாதன். வைத்தீஸ்வரன், அம்பாள் பெயர் ஸ்ரீதையல்நாயகி, முருகன் செல்வமுத்துக் குமரன் எனும் பெயரோடு விளங்குகின்றார். கோளிலித்தலம் என்று அழைக்கப்படும் வைத்தீஸ்வரன் கோயிலில் நவக்கிரகங்கள் வக்கிரம் இல்லாமல் வரிசையாக ஈஸ்வரன் சந்நிதிக்கு பின்புறம் நோய்கள் தீர வேண்டி பிரார்த்தித்திருக்கும் காட்சியைக் காணலாம்.

அங்காரகனின் செங்குஷ்ட நோயைத் தீர்த்த படியால் அங்காரகத் தலமாகின்றது. அங்காரகனுக்குத் தனிச் சந்நிதி உண்டு. மூல விக்கிரகத்தோடு உற்சவ விக்கிரகமான அங்காரகனும் உண்டு. இரண்டும் தனித்தனிச் சந்நிதிகளாக உள்ளன. அங்காரக தோஷம் உள்ளவர்கள் இங்கு வந்து வழிபடுவதால் தோஷம் நீங்கப்பெறுவர்.


**தலப்பெருமை :**

முருகன் சூரபத்மனை வெல்ல வேல் வாங்கிய தலம் இது. இறைவன் 4448 நோய்களையும் அதோடு

## உஜ்ஜைனி கோயில் அமைப்பு

**உஜ்ஜைனி மங்கள நாதர் கோயில் 5 அடி உயர கோபுரத்துடன் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. மங்களநாதர் கோயில் கருவறை, பூமத்திய ரேகையின் நேர்க்கோட்டில் அமைந்துள்ளது. திருமணத்தடை ஏற்படுபவர்கள் செவ்வாய்க் கிழமைகளில் விரதம் இருந்து அங்காரகனுக்கு சிவப்பு ஆடை சாத்தி, செவ்வரளி மலர்களால் அர்ச்சனை செய்து, துவரம் பருப்பு பொடி கலந்த அன்னத்தை நிவேதனம் செய்து, பிறகு அதனை தானம் செய்கிறார்கள். கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கள் கைகளால் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்யலாம். அர்ச்சனை அபிஷேகப் பொருட்களை வெளியில் விற்கும் கடையில் வாங்கும் பக்தர்கள், பூசாரி மந்திரம் சொல்ல தாங்களாகவே சாமிக்கு அபிஷேகம் செய்கிறார்கள்.**

**மங்களநாதர் கோயிலில் மார்ச் மாதம் அங்காரக சதுர்த்தியன்று சிறப்பு பூஜையும், சிறப்பு யாகங்களும் நடைபெறும். அப்போது நடைபெறும் "பட்" பூஜை மிகவும் சிறப்பு வாய்ந்தது. சதுர்த்தி, சப்தமி, அஷ்டமி, துவாதசி திதிகளிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் இந்த ஆலயத்தில் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது.**









## அங்காரகன்

| | | | |
|---|---|---|---|
| நிறம் | – சிவப்பு. | கனரக | – வாகனம். |
| தேவதை | – முருகன். | ஆட்சி | – மேஷம், விருச்சிகம். |
| பிரத்யதி தேவதை | – பிருத்வி. | உச்சம் | – மகரம். |
| இரத்தினம் | – பவளம். | நீசம் | – கடகம். |
| மலர் | – செண்பகம். | மூலத்திரிகோணம் | – மேஷம். |
| குணம் | – குரூரன். | உறுப்பு | – தலை. |
| ஆசனவடிவம் | – முக்கோணம். | நட்சத்திரங்கள் | – மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம். |
| தேசம் | – அவந்தி. | பால் | – ஆண். |
| சமித்து | – கருங்காலி. | திசைகாலம் | – 7 ஆண்டுகள். |
| திக்கு | – தெற்கு. | கோசார காலம் | – ஒன்றரை மாதம். |
| சுவை | – துவர்ப்பு. | நட்பு | – சூரியன், சந்திரன், வியாழன். |
| உலோகம் | – செம்பு. | பகை | – புதன், இராகு, கேது. |
| வாகனம் | – அன்னம். | சமம் | – சுக்கிரன், சனி. |
| பிணி | – பித்தம். | உபகிரகம் | – தூமன். |
| தானியம் | – துவரை. | ஸ்தலம் | – வைத்தீஸ்வரன் கோயில், உஜ்ஜைனி மங்களநாதர் கோயில். |
| காரகன் | – சகோதரம், பூமி, வீடு. | | |

ஊழ்வினைகளையும் தீர்க்கவல்ல வைத்தியநாதராய் எழுந்தருளியுள்ளார்.

அவருக்கு உதவியாய் அம்பாள் கையில் தைல பாத்திரமும், அமிர்த சஞ்சீவியும், வில்வமரத்தடி மண்ணும் ஏந்தி வர, இருவரும் தீராத நோய்களையும் வினைகளையும் தீர்த்து வைக்கும் வேதியத் தம்பதிகளாகின்றனர். இங்கு அடி வைப்பதால் பில்லி சூனியம் முதலானவையும் கூட அகலும் என்பர்.

**ஜடாயு குண்டம் :**

சீதையை இராவணன் சிறையெடுத்துச் சென்ற போது, அதனைத் தடுத்த ஜடாயுவின் சிறகுகளை இராவணன் வெட்டி வீழ்த்தினான். பின்னர் இராமன் அவ்வழியில் சீதையைத் தேடி வந்த நேரத்தில், நடந்தவற்றைச் சொல்லிய ஜடாயு இராமனது காலடியில் உயிர்துறந்தான்.

இராமபிரான் ஜடாயுவின் வேண்டுகோளின்படி சிதையடுக்கி அவரது உடலைத் தகனம் செய்த இடம் “ஜடாயு குண்டம்” என்று அழைக்கப் பெறுகின்றது. இன்றும் இக்குண்டத்தில் உள்ள திருநீற்றினை அணிந்தால் தீராத நோய்களும் தீரும் எனும் நம்பிக்கை உண்டு. ஜடாயு குண்டத்திற்கு அருகில் ஜடாயு மோட்சத்தை சிலை வடிவில் காணலாம். ஜடாயு உற்சவ மூர்த்தியாகவும் இருக்கின்றார்.

**திருச்சாந்துருண்டை :**

இது வைத்தியநாதப் பெருமானின் பிரசாதமாக நோய் நீங்கும் பொருட்டு அளிக்கப்பெறுவது. ஆலயத்தில் விபூதி குண்டத்தில் (ஜடாயு குண்டத்தில்) உள்ள விபூதியையும் சித்தாமிர்த தீர்த்த நீரையும் சேர்த்துக் குழைத்து, ஐந்தெழுத்து மந்திரமாகிய "நமசிவாய" என்பதனை ஓதிக்கொண்டே, முத்துக் குமார ஸ்வாமி சந்நிதியில் உள்ள குழியம்மியில் அரைத்து உளுந்தளவில் உருட்டி, அம்பாள் திருவடியில் வைத்து அர்ச்சித்து எடுத்துச் சேகரித்து வைத்துக் கொண்டு வேண்டியவர்களுக்கு அந்த உருண்டை வழங்கப் பெறுகின்றது.

இதனை உண்போர் நோய் (தீவினை) நீங்கி வாழ்வாங்கு வாழ்ந்து, பின் முக்தி எய்துவர். இங்கு அர்த்த சாமப் பூஜை செல்வ முத்துக்குமார ஸ்வாமிக்குச் செய்த பின்புதான் ஸ்வாமிக்குச் செய்யப் பெறுகின்றது. அர்த்த சாமப் பூஜையின் போது முத்துக்குமார ஸ்வாமிக்கு அணிவிக்கப் பெறும் சந்தனமான "நேத்திரிப்படி" சந்தனமும் வேண்டிய வரம் தரவல்ல மகிமை உடையது. இந்தச் சந்தனத்தை "புழுகாப்பு" என்பர்.

**தல அமைவிடம்**

வைத்தியநாத பெருமானின் ஆலயம் நாகப்பட்டிண மாவட்டத்தில், சிதம்பரத்திலிருந்து சுமார் 28 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இந்த தலத்தினை அடைய பேருந்து வசதிகளும் உண்டு.

## வைத்தீஸ்வரன் ஆலயத் திருவிழாக்கள்

**நாள்தோறும் 6 கால பூஜைகள் உண்டு. பங்குனியில் பிரம்மோத்ஸவம் நடைபெறும். அதில் ஐந்தாவது நாளன்று செல்வமுத்துக்குமரன் வைத்திய நாதரைப் பூசித்துச் செண்டு பெறும் காட்சி மிக அற்புதமான ஒன்று. உற்சவ காலத்தில் கைலையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியிருப்பது போல் ஸ்வாமி ஒரு புறமும் அம்பாள் ஒரு புறமுமாக எழுந்தருள, செல்வமுத்துக்குமார ஸ்வாமி நடுவில் எழுந்தருள்வார். மாதந்தோறும் வரும் கார்த்திகை விழா இங்குச் சிறப்பானது. இந்நாளில் செல்வ முத்துக்குமார ஸ்வாமிக்கு நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்க மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுவர்.**

**அபிஷேகங்களில் சந்தன அபிஷேகம் மிகவும் சிறப்புடையது. தருமை ஆதீனம் ஸ்ரீஸ்ரீ குருமகாசந்நிதானம் மாதந்தோறும் கார்த்திகை அன்று எழுந்தருள, அவர்கள் திரு முன்னிலையில் இந்த அபிஷேகம் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சி, அங்காரக தலமாதலால் செவ்வாய்க் கிழமைகளில் அங்காரகர் பிரகாரத்தில் வலம் வருவார். கார்த்திகை மாத சோம வாரங் களில் ஈசுவரனுக்குச் சங்காபிஷேகமும் உண்டு.**



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 83

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | 2 |
| 3 | | | | | | | | | | | 4 |
| 5 | | 6 | | 7 | | | | | | | 8 |
| | | 9 | | | | | | | 10 | 11 | |
| | | | 12 | | 13 | | | | | | 14 |
| | | | | | | | | | | | 15 |
| | 16 | | | | 17 | | | | | | 18 |
| | | | | | | | | | | 19 | |
| | | | | | 20 | | | | | | |
| | | 21 | | 22 | | | | | | 23 | |
| | | | 24 | 25 | | | | | | | |
| 26 | 27 | | | | | | | | | | 28 |

## இடமிருந்து வலம்

1. ஆண்டாள் பிறந்த திருத்தலம்......(8)
3. பகவான் கிருஷ்ணரின் தாய்.....(3)
7. இராமபிரானுக்கு கங்கை நதியைக் கடக்க உதவிய வேடுவன்.....(3)
9. கிருஷ்ணர் மாதங்களில் நான் ......(4) என்றார்.
13. வடஇந்திய புனித நதிகளில் முதன்மை யானது....(3)
17. ஸ்ரீகிருஷ்ணரின் திருநட்சத்திரம் ... (3)
20. கிருஷ்ணரின் வளர்ப்புத் தந்தை.....(6)
21. கிருஷ்ணரின் பால்ய நண்பர்....(4)
25. பிரபந்தங்களை அருளியவர்கள்....(6)

## வலமிருந்து இடம்

2. திருமாலின் மேல் இரு திருக்கரங்கள் ஒன்றில் இருப்பது....(3)
4. பகவான் பாம்பணையில் பள்ளி கொண்ட தோற்றம் உள்ள தலங்களில் ஒன்று....(8)
8. மஹாலக்ஷ்மியின் மணாளர்.....(5)
10. சீதையைக் கவர மான் வடிவில் வந்தவன்......(4)
15. ஆண்டாள் மாலே....(5) என்று பாடி துதிக்கின்றார்.
18. துரியோதனன் சபையில் கிருஷ்ணரால் ரக்ஷிக்கப்பட்டவள்.....(4)
19. கிருஷ்ண பகவான் தன் குழந்தைப் பருவத்தில் பல லீலைகள் புரிந்த இடம் ....(5)
20. இராமரின் அவதார திதி.....(3)
23. இராம பக்தர்......(6)
28. ஆயர்பாடியில் ஸ்ரீகிருஷ்ணருடன் ஆடிப் பாடியவர்கள்.....(6)

## மேலிருந்து கீழ்

1. திருமாலின் தேவியருள் ஒருவர்......(3)
5. இராமபிரானிடம் சரணடைந்த இராவணனின் தம்பி....(7)
6. நரகாசுரனின் தாய்...(4)
11. இராமபிரான் மறைந்து நின்று அம்பு எய்ததால் மோட்சம் அடைந்த வானர அரசன்....(2)
12. இராமபிரான் தன் அவதார முடிவில் ....(3) நதியில் மூழ்கி வைகுந்தம் அடைந்தார்
24. பக்தர்கள் கோயில்களில் ....(2) தீபம் ஏற்றுவர்

## கீழிருந்து மேல்

14. இராமபத்தினி.....(2)
16. இராமபிரானின் தந்தை....(5)
21. ஸ்ரீகிருஷ்ண பகவானின் அத்தை, பாண்டவர் களின் தாய்.....(5)
22. இராமபிரானின் புதல்வர்கள்...(3)
26. ஜானகி தேவியின் மற்றொரு பெயர்....(3)
27. புராண இதிகாச காலத்தில் மாணவர்கள் கலை பயிலுமிடம்....(5)
28. கண்ணபிரான் பசுக்களைக் காத்ததால்....(6)

தொகுப்பு :
திருமதி எம்.இராஜகுமாரி,
ஆரணி, 9976238430

புதிருக்கு விடை அறிய
21ம் பக்கம்
பார்க்கவும்...

# யோகா

டாக்டர் .கி.ஜ. நிகிலா வெங்கட்,
கோயம்பத்தூர், 8940991234.



யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட் டிற்கும் உதவிடும் கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும். பதஞ்சலி முனிவரால் இக்கலை இந்தியாவில் தோன்றி வளர்ந்து வழிவழியாய் வரும் ஓர் ஒழுக்க நெறியாகும். இது உடலையும் உள்ளத்தையும் நலத் துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறி.

ஸ்ரீமத் ராமாயணத்தில் இராமபிரான் கிஷ்கிந்தா காண்டத்தில் அனுமனைப் பற்றி லக்ஷ்மணனிடம் கூறும் போது ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமியைச் சொல்லின் செல்வர் என்று கூறுகிறார். ஆஞ்சநேயர் நவ வியாகரண பண்டிதராக இருந்ததாலும் சாஸ்திரங்களையும் வேதங்களையும் உப நிஷத்துக்களையும் கற்றறிந்திருந்தாலும் மிகவும் இனிமை யாகவும் மென்மையாகவும் உரையாற்றியதால் அத்தகு பட்டத்தை கௌரவத்தை இராமபிரான் ஆஞ்சநேய ஸ்வாமிக்கு கொடுத்தார். அதுபோல நமது பாரதப்பிரதமரின் இனிமையான மேன்மையான அறிவார்த்தமான தர்ம சிந்தனை மிக்க சொற்களை இந்த உலகமே கேட்டு வியந்து அவரது வழிகாட்டுதலை வேண்டி நிற்கின்றது. இது நம் அனைவருக்கும் பெருமையே. நம் பாரதத்தின் சொத்தான யோகாவை உலகில் உள்ளோர் அனைவரும் பயனுற வேண்டும் என்ற பெருந்தன்மையான எண்ணத்தோடு உலக அளவில் கொண்டு சேர்த்த பெருமை நம் பாரதப் பிரதமரையே சாரும்.

நாம் இந்தியர்கள் ஒவ்வொருவரும் இந்த யோகா தினத்தில் யோகாவின் பெருமையை உணர்ந்து தினந்தோறும் யோகப் பயிற்சிகள் செய்து உடலை வலிமையோடும், புத்துணர்ச்சியோடும் வைக்க வேண்டும்.

## பெண்களுக்கு யோகா தரும் பலன்கள்

பெண்கள் நாட்டின் கண்கள். பெண் களின் ஆரோக்கியம் மிகவும் முக்கியமான தாகும். ஒவ்வொரு வீட்டிலும் பெண்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான் அந்த குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும். ஆரோக்கியம்தான் நிலையான ஆனந்தத்தைத் தர வல்லது. பெண்கள் தங்களை மிகவும்



சுறுசுறுப்பாகவும் புத்துணர்ச்சியோடும் வைப்பதற்கு யோகப்பயிற்சி மிகவும் முக்கியம். எளிமையான யோகப்பயிற்சிகள் செய்வதன் மூலம் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

யோகா பல தலைமுறைகளாக மக்களை குணப் படுத்தி வருகிறது. இந்திய துணைக் கண்டத்தில் தோன்றிய இது மனிதர்களுக்கு உடல், மனம் மற்றும் ஆன்மீக ஆதரவை வழங்கியுள்ளது. இந்த ஆண்டு கள் மற்றும் சகாப்தங்கள் முழுவதும் யோக விஞ்ஞா னம் அனைத்து வயதினருக்கும், பாலின மக்களுக் கும் சமமாக நன்மைகளைத் தரும் சில பயிற்சிகள் உள்ளன.

பெண்கள், யோக தத்துவத்தின்படி துர்கா தேவியின் வெளிப்பாடு. இந்த கிரகத்தில் வாழ்வின் ஆதாரம் மற்றும் அனைத்து வகையான ஆற்றல்க ளின் ஒன்றியம், ஒரு பெண் குழந்தைப் பருவத்தில்



**மன்னன் எவ்வழியோ! மக்கள் அவ்வழி!!**
என்பதற்கு ஏற்றார் போல் நமக்காக நமது பாரதப் பிரதமரும் யோகா தினத்தன்று நம் அனைவர் முன்னிலையிலும் யோகப் பயிற்சிகள் செய்து காட்டி வருகிறார். நமது பாரதப்பிரதமர் ஸ்ரீநரேந்திர மோடி அவர்கள் இந்த அற்புத மான யோகக் கலையை உலகெங்கிலும் பரவச் செய்து உலக மக்கள் யாவரும் சிறந்த ஆரோக்கியத்தோடு வாழ்வதற்கு வழி காட்டி உள்ளார். அதன் மகத்துவத்தை நாம் அனைவரும் போற்றுவதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் ஜூன் 21, 2015 அன்று உலக யோகா தினமாக அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு 2023 உலக யோகா தினத்தை மிகவும் சிறப்பாக அற்புதமான மஹோத்ஸவமாக கொண்டாட நமது பாரதப்பிரதமர் அறிவுறுத்தி உள்ளார். நமது பாரதப் பிரதமர் தற்போது ஜி20 நாடுகளுக்கு தலைவராக உள்ளார். நடப்பாண்டு ஜி20 மாநாட்டின் சின்னத்தில் வசுதைய்வ குடும்பகம் (ஒரு பூமி- ஒரு குடும்பம்-ஒரு எதிர்காலம்) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நமது யோகா தினத்தை "வசுதைய்வ குடும்பகம்" என்ற தலைப்பில் நாடு முழுவதும் கொண்டாட பிரதமரின் உத்தரவின் பேரில் ஏற்பாடுகள் வெகு விமர்சையாக தொடங்கப்பட்டு விட்டது. வசுதைய்வ குடும்பகம் என்றால் "உலகம் முழுவதும் ஓர் குடும்பம்" என்பதாகும்.

*அயம் நிஜ: பரோ வேதி கணனா லகுசேதசாம்*
*உதார சரிதானாம் து வசுதைய்வ குடும்பகம்*

என உபநிஷத்தில் சொல்லப்பட்டு உள்ளது. நமது பெருமை மிகு பாரதத்தில் தான் இத்தகு உயர்ந்த சிந்தனை மிகு சொற்களை காண முடியும்.



இருந்து பருவமடைதல் மற்றும் தாய்மை வரை வாழ்க்கையின் பல கட்டங்களில் முன்னேறுகிறாள். வாழ்க்கையில் வரும் இந்தக் கட்டங்கள், மாற்றங்கள் மற்றும் சவால்களை சமாளிக்க யோகா உதவுகிறது.

பெண்கள் ஆண்களை காட்டிலும் அதிக பொறுப்பை ஏற்பவர்கள். வீடு, குழந்தைகள், அலுவலகம், சுற்றத்தார் என அனைவரையும் கையாள வேண்டி உள்ளது. வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருப்பதாலேயே பல பெண்களுக்கு மனபாரம், நெஞ்சு பகுதியில், மூச்சு விடுவதில் சிறிது சிரமம், தூக்கம் இன்மை, சோர்வு, கோபம், பதட்டம், எரிச்சல், மகிழ்ச்சியற்ற தன்மை என அனைத்தையும் அனுபவிக்கிறார்கள். இந்த மாதிரி எல்லாம் ஏற்படுவதற்கு காரணம் இயலாமை மற்றும் நம்மைச் சார்ந்தவர்கள் நம்மை புரிந்து கொள்ள வில்லையே, நமக்காக யாரும் எதையும் செய்ய வில்லையே என்று ஆதங்கம் இவற்றால் ஏற்படுவதேயாகும்.

வாழ்வின் நிதர்சனம் யாதெனில் நம்மை யாரும் புரிந்து கொள்ள வில்லையே என்பதை காட்டிலும் பெண்கள் தமது பலம் பலவீனம் இவற்றை புரிந்து அவற்றை சரி செய்ய முயற்சிக்க வேண்டும். அவ்வாறு முயற்சி செய்வதற்கும் புரிந்து கொண்டு வாழ்வை எளிமையாக, மகிழ்ச்சியாக வாழ யோகப் பயிற்சிகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. யோகா என்ற இந்த முறையை பதஞ்சலி மகரிஷி ஏற்படுத்தி எட்டு வகைப்படுத்தியுள்ளார். ஆனால் தற்காலத்தில் அவற்றை நியமத்துடன் செய்வது கடினம். தற்கால குருமார்கள் யோகா பயிற்சியை எளிமையாக்கியும், மூச்சுப் பயிற்சிகளை எளிமையாக்கியும் வகுத்துக் கொடுத்துள்ளார்கள். அவற்றில் சில வற்றை தொகுத்துக் கொடுத்துள்ளேன். முறையாக கற்றறிந்தவர்களின் முன் னிலையில் பயிற்சி எடுத்து பெண்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தி நமது பாரதப் பிரதமரின் கனவை மெய் படுத்தி ஆரோக்கிய பாரதம் உருவாக நாமும் நாள்தோறும் யோகப் பயிற்சியைக் கடமையாக ஆற்றுவோம் என இந்த யோகா தினத்தில் அனைவரும் உறுதி ஏற்போம்.



## பெண்களுக்கு உகந்த யோகாசனங்கள்

1) பஸ்சிமோதாசனா, 2) ஹலாசனா, 3) சேதுபந்தனாசனா, 4) வ்ருட்சாசனா, 5) உட்கதா கோனாசனா, 6) மலாசனா, 7)நவாசனா. இந்த யோகா தினத்திலிருந்து யோகாவின் மேன்மைகளை அறிந்து எளிய முறையில் நோயற்ற வாழ்வை வாழ்ந்து நம் பாரதத் திருநாட்டை வலிமை மிகுந்த நாடாக மாற்றுவோம்.

## வைணவ குறுக்கெழுத்துப்புதிர் 83க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ | வி | ல் | லி | பு | த் | தூ | ர் | | கு | ங் | 2 ச |
| 3 தே | வ | கி | | ல் | ட | க | ற் | பா | ப் | ரு | 4 தி |
| 5 வி | ன் | 6 பூ | | 7 கு | க | ன் | னு | ஷ் | வி | கா | 8 ம |
| பீ | த | 9 மா | ர் | க | ழி | ன் | ச | ரீ | 10 மா | 11 வா | தை |
| ஷ் | ர | தே | 12 ச | | 13 க | ங் | கை | | | லி | 14 சீ |
| ணா | ச | வி | ர | ன் | | | ணா | ண் | வ | ணி | 15 ம |
| ழ் | 16 த | தே | யூ | ச | 17 ரோ | கி | ணி | தி | ப | ரௌ | 18 தி |
| வா | ம் | தி | | கு | | டி | பா | ர் | ய | 19 ஆ | |
| ர் | ல | ந் | மி | வ | 20 ந | ந் | த | கோ | ப | ர் | ன் |
| கி | கு | 21 கு | சே | 22 ல | ர் | ய | னே | ச | ஞ் | 23 ஆ | ல |
| தே | ரு | | 24 நெ | 25 ஆ | ழ் | வா | ர் | க | ள் | | பா |
| 26 வை | 27 கு | | ய் | | | ள் | க | ர் | ய | பி | 28 கோ |

அலசுவோம்... அறிவோம்... ஆதிகாவிய நாயகர்களை...



# ஞானக் கண்களால் பார்த்த சஞ்சயன்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

இது நேரடி வர்ணனைகளின் காலம். எம்பெருமான் திருவேங்கடமுடையானும், எம்பெருமாட்டி ஸ்ரீபத்மாவதி தாயாரும் பிரம்மோத்ஸவங்கள் கண்டருளும் பொழுது வித்வான்கள் பலர் அதனை நேரடியாகக் கண்டு வர்ணிப்பதைக் கண்டும் கேட்டும் மகிழ்கின்றோம்.

சென்ற திரேதா யுகத்திலும் அப்படிப்பட்ட நேரடியாகக் காண்பது போலக் காணும் தெய்வீகப் பார்வையை ஸ்ரீவியாஸ பகவானின் அருளால் பெற்றவன் சஞ்சயன். அந்த தெய்வீகப் பார்வையைக் கொண்டு தான் கண்டதை சஞ்சயன் வர்ணனை செய்ய, அதைத் தன் செவிகளால் கேட்டுத் தெரிந்து கொண்டவன் திருதராஷ்டிரன். புராண இதிகாச காலங்களிலும், இக்கலியுகத்து மன்னர்களின் சரித்திரக் கதைகளிலும் நாம் காணும் சாரதிகள் என்பவர்கள் வெறும் தேரோட்டிகள் மட்டும் அல்லர். தாங்கள் யாருக்காகத் தேரோட்டுகின்றனரோ அவர்களுக்கு நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனாய், ஆபத்துக் காலங்களில் உயிர் காப்பவனாய் இப்படிப் பலவிதமான பணிகளையும் உள்ளன்புடன் செய்து வந்தவர்கள் தாம்.

ஒரு தேரோட்டியால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்பதற்கு உதாரணங்களாக முறையே கண்ணபிரானும், சல்லியனும் விளங்கியதை மகாபாரதம் தெளிவாக எடுத்தியம்புகின்றது.

திருதராஷ்டிரனின் நம்பிக்கைக்கு உரியவனாக விளங்கிய சஞ்சயனை ஏறக்குறைய விதுரரின் கதாபாத்திரத்துக்கு ஒப்பிடலாம். கௌரவர், பாண்டவர் இரு தரப்பினர் மீதும் சமமான அளவு அன்பு வைத்திருந்த சஞ்சயன், விதுரரைப் போலவே பாண்டவர்கள் தரப்பிலிருந்த நியாயத்தை உணர்ந்தவனாக இருந்தான்.

சூதாட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட பாண்டவர்கள் வனவாசம் சென்ற பிறகு, துரியோதனன் உள்ளிட்டவர்களின் நடவடிக்கைகளைப் பற்றி விதுரர் குறை கூறினார். இதனால், வெகுண்ட திருதராஷ்டிரன் தன் தம்பி விதுரரிடம் “நீ உனக்குப் பிரியமான பாண்டவர்களிடமே சென்று விடு!” என்று கூறிவிட, விதுரரும் கிளம்பிச் செல்கிறார்.

சற்று நேரத்தில் தனது தவற்றை உணர்ந்த திருதராஷ்டிரன் உடனடியாகச் சென்று விதுரரை அழைத்து வருமாறு சஞ்சயனிடம் கூற, சஞ்சயனும் பாண்டவர்கள் இருக்குமிடத்திற்குச் சென்று விதுரரின் மனம் உருகும்படியாகப் பேசி சமாதானம் செய்து அழைத்து வந்து விடுகிறான்.

பாண்டவர்களின் வனவாசமும், அஞ்ஞாத வாசமும் முடிந்த பிறகு மகாபாரத யுத்தம் குறித்த பேச்சுகள் கிளம்பின. அச்சமயத்தில் திருதராஷ்டிரனின் சார்பாக விராட தேசத்திலிருந்த பாண்டவர்



களிடம் தூது செல்லும் பொறுப்பு வழங்கப்பட்டது.

அங்கு சென்று ஸ்ரீகிருஷ்ணர், யுதிஷ்டிரர் உள்ளிட்டவர்களை வணங் கிய சஞ்சயன், துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்களைக் குறை கூறியும், அறத்தில் பற்றுக் கொண்ட தரும புத்திரரை உயர்த்திக் கூறியும் போர் நடப்பதற்கு வாய்ப்பில்லாத ஒரு சூழலை ஏற்படுத்த முனைந்தான். தரும புத்தி ரரை அளவுக்கு மீறிப் புகழ்ந்ததன் மூலம் அவர் துரியோதனனிடம் தனக்கு உரிய ராஜ்யத்தைக் கேட்காமல் இருக்க வேண்டும் என்பதையும், இதன் காரண மாக இரு தரப்பினரிடையே யுத்தம் நேராமல் தவிர்க்கப்படும் என்பதையும் உறுதி செய்யும் விதமாக ஒரு தூதுவ னுக்குரிய சாமர்த்தியத்துடன் சஞ்சயன் பேசியதைப் பார்க்க முடிகிறது.

பின்னர் ஸ்ரீகிருஷ்ணனை துரியோ தனனுக்கு உதவ வேண்டும் என்ற திருதராஷ்டிரனின் வேண்டுகோளை ஏற்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் திருமாளிகைக்கு சஞ்சயன் சென்ற பொழுது உள்ளே அந்தப்புரத்தில் அர்ஜுனன், திரௌபதி, ஸ்ரீகிருஷ்ணர், சத்யபாமா உள்ளிட்டோர் அமர்ந்து ரகசிய ஆலோசனை செய்து கொண்டு இருந்தனர். இருந்தாலும், எந்த ஒரு தயக்கமுமின்றி அவர்கள் சஞ்சயனை உள்ளே அழைத்துப் பேசினர். இவ்வாறு எம்பெருமானின் அந்தப்புரத்துக்கே செல்லும் உரிமை உடைய சஞ்சயனைக் குறித்து, "அந்தரங்கம் புக்கேனோ சஞ்சயனைப் போலே?" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகசியம் புகழ்ந்து பேசுகின்றது.

மகாபாரத யுத்தம் தொடங்கிய பிறகு வியாஸமகரிஷியின் அருளால் யுத்த களத்தில் நடந்தவற்றைக் கண்டு திருதராஷ்டிரனுக்கு விவரிக்கும் வேளையிலும், கௌரவர்களின் தொடர் தோல்விகளால் துவண்ட அம்மன்னனுக்குத் தத்துவார்த்தமாகப் பேசி ஆறுதல் கூறினான் சஞ்சயன். இவையனைத்துக்கும் மேலாக

**ஸஞ்ஜய உவாச**

*"யத்ர யோகேச்வர: க்ருஷ்ண: யத்ர பார்த்தோ தனுர்தர:*
*தத்ர ஸ்ரீர் விஜயோ பூதி: த்ருவா நீதிர் மதிர் மம"*

என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் பின்பகுதியில் வரும் சுலோகம் ஸ்ரீகிருஷ்ணனே பரதத்துவம் என்று உணர்ந்த சஞ்சயனின் மெய்ஞ்ஞான நிலையை உணர்த்துகின்றது.

இத்தனை மெய்யறிவும் செய்ந்நன்றியும் உடைய தேரோட்டி யும் உண்மை நண்பனுமாகிய சஞ்சயனைப் பெற்றிருந்தும் திருதராஷ்டிரனும், அவனுடைய வாரிசுகளும் முறையற்ற வழி முறைகளைத் தேர்ந்தெடுத்ததைப் பார்க்கும் பொழுது, நம் முன்னோர்கள் கூறும் "விதி வலியது" என்ற கோட்பாட்டினை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது.

*தொடர்ந்து அலசுவோம்...*

**திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி புஷ்ப யாகம்**



**யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவன் மஹா விஷ்ணு. யாகத்தினுடைய பயனை அருள்பவன்; யாகத்தின் பயனை அனுபவிக்கக் கூடியவன்; யாக பலத்தைக் கொடுக்கக் கூடியவன். அப்படிப்பட்டவன் இந்த யாகத்தை ஏற்று, அதிலே தவறு ஏதாவது நடந்திருந்தாலும், லோபம் இருந்தாலும் மொத்தத்தையும் போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறான். இயற்கையின் சீற்றத்தி னால், இப்பூமியில் நாம் செய்யும் பலவித அபசாரங்களினால் பூமா தேவி சீற்றம் கொண்டு வருந்துகிறாள். அவ்வருத்தத்தை யும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக, பிரம்மோற்சவம் முடிந்து புஷ்ப யாகம் செய்யப் படுகிறுது. அதில் புஷ்பங்களாலேயே புஷ்பங் களே யாகமாக கூடை கூடையாக எல்லாவித மலர்களும் உபயதேவியருடன் ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமிக்கு பாதாதி கேசம் சேர்ப்பார்கள். தேவர்கள் பூமாரிப் பொழிவது போலிருக்கும், தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் தூசாகும்.**







மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

பூதேவியைப் பாதுகாத்தப்பின்பு ஸ்ரீஹரி வைகுண்டத்திற்கு உடனடியாக செல்ல விரும்பவில்லை. தன்னுடைய உருவத்தைக் கண்டு ஆதிலக்ஷ்மி அஞ்சுவாளோ என்று எண்ணினார். அதுமட்டும் இன்றி, தன்னை விரும்பிய பூதேவியுடன் இருக்க வேண்டும் எனவும் எண்ணம் கொண்டார். அக்காரணத்தினாலேயே கருடாழ்வானிடம் வைகுண்டத்தில் உள்ள கிரிடாத்ரியைப் பூலோகத்திற்குக் கொண்டு வரும்படி ஆணையிட்டார்.

ஸ்வாமிக்கு மிகவும் நெருக்கமானவரான கருடாழ்வான் சரியென்று சொல்லி வைகுண்டம் வந்தடைந்தார். ஆதிலக்ஷ்மியிடம் சென்றார். அதன் பிறகு கதை தொடர்கிறது.

அம்மா! இரண்யாட்சகன் என்னும் அசுரனை அழிப்பதற்காகவும், கடலுக்குள் மூழ்கிய பூமியை மேலே கொண்டு வருவதற்காகவும் ஸ்ரீஹரி வராக அவதாரம் தரித்தார். தன்னுடைய கூரிய கோரைப் பற்களால் இரண்யாட்சகன் தலையைத் துண்டு துண்டுகளாக்கினார். அதன் பிறகு, நீரில் மூழ்கிக் கிடந்த பூமியைச் சாதாரண நிலையிலே இருக்கும்படி நிலைப்பெறச் செய்தார். ஸ்ரீஹரி இப்பொழுது பூலோகத்தில் வசிப்பதற்கே விருப்பம் உடையவராய் இருக்கிறார். அதனால் வைகுண்டத்தில் இருக்கும் கிரிடாத்ரியைக் கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டுள்ளார்.

தாயே! கிரிடாத்ரியைப் பூலோகத்திற்குக் கொண்டு செல்ல தாங்கள் அனுமதி தர வேண்டும். அதற்காகவே நான் உங்களிடம் வந்தேன் என்று மிகவும் பணிவாகக் கூறி நின்றான்.

கருடாழ்வான் நின்ற தோற்றத்தை ஆதிலக்ஷ்மி பார்த்தாள். அவன் கூறிய அனைத்தையும் அமைதியாகக் கேட்டறிந்தாள். மேலும், கருடாழ்வான் தாயே! ஒரு வார்த்தை பன்றி வடிவத்தில் காட்சியளித்தால், தாங்கள் அஞ்சுவீர்கள் எனக்கூட அவர் தன் சந்தேகத்தையும் வெளிப்படுத்தினார் எனக் கூற, அதைக்கேட்டு ஆதிலக்ஷ்மி நான் ஸ்வாமியை விட்டு விலகாமல் எப்பொழுதும் அவருடனேயே இருப்பவள் அல்லவா? ஸ்வாமியும் இதை நன்கு அறிவாரே! இருந்தும் ஸ்வாமி இப்படி சொல்லியது விந்தையாக உள்ளது. ஸ்ரீஹரி எந்த வடிவத்தைத் தரித்தாலும், அந்த வடிவத்தைக் கண்டு எந்தவொரு மனவேறுபாடும் கொள்ளாமல் ஹரியின் திருமார்பில் வசிப்பவள். இவையனைத்தும் அறிந்தும் ஸ்ரீஹரி இவ்வாறாகப் பேசுவது புதியதாக உள்ளது.

இருக்கட்டும்! ஸ்ரீஹரி அந்த வடிவத்தில் வைகுண்டத்திற்குத் திரும்பி வருவதற்கு விருப்பபட வில்லை என்றால், நானே பூலோகத்திற்கு வந்து ஹரியின் மார்பில் அமைதியாக இருந்து கொள்கிறேன்.

ஆனாலும், கருடாழ்வானே நான் சொல்வதை நீ பொறுமையாகக் கேள்! மச்சாவதாரத்தில் பிரளய காலத்தில் தனியொருவராக நீந்திக் கொண்டிருந்த சமயத்திலும் கூட நான் ஹரியின் மார்பிலேயே இருந்தேன். கூர்மாவதாரத்தில் கடலிலே மூழ்கி மந்தர மலையைத் தூக்கிய போதும் அவருக்கு நான் துணையாக இருந்தேன்.

கட்டைவிரல் அளவே உடல் தாங்கி ஆலிலையின் மீது படுத்திருந்த போதும் கூட நான் அவர் மார்பிலேயே வாசம் செய்திருந்தேன். நிலவும், நிலவின் ஒளியும் எவ்வாறு வேறானது இல்லையோ அதுபோல நானும் அவரும் வேறானவர்கள் அல்ல. ஒருவரே.

எப்பொழுதும் எந்த அவதாரக் காலத்திலும் அவரை விட்டு தனியாக இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. அதனால் நான் இப்பொழுதே என் பரிவாரங்களுடன் பூலோகத்திற்குச் சென்று அந்த வராஹ மூர்த்தியின் மார்பினில் அமர்ந்திருப்பேன். ஸ்வாமி எவ்வளவு பயங்கரமான உருவத்தைத் தாங்கினாலும் குறைபாடுடைய தேகத்தை உடையவராக இருந்தாலும் எனக்கு அவரைக் கண்டு அச்சமோ அருவருப்போ எப்பொழுதுமே இருந்ததில்லை.



இந்த விஷயம் அப்படியிருக்கட்டும்! ஸ்ரீஹரி பூலோகத்தில் கிரிடாத்ரியில் உல்லாசமாகச் சுற்றித் திரிய வேண்டும் என்று எண்ணியதில் எந்தவொரு தவறும் இல்லை. ஸ்வாமியின் ஆணையின்படி வைகுண்டத்தில் உள்ள கிரிடாசலத்தைப் பூலோகத்திற்குக் கொண்டு சென்று சேர்ப்பாயாக! ஸ்வாமி எங்கு இருக்க விரும்புகிறாரோ அந்த இடத்தில் பூதேவியுடன் மகிழ்ச்சியோடு சுற்றித் திரியட்டும்! என்றாள்.

மேலும், லக்ஷ்மி தேவி தன் கலைகள் பலவும் வைகுண்டத்திலேயே வைத்து விட்டு ஒரு கலையுடனே பூலோகத்திற்கு வந்தாள்.


ஸ்வாமி கிரிடாத்ரியையும், அந்த மலையின் மேல் நீளாதேவி, ஸ்ரீதேவியையும் தூரத்திலிருந்து பார்த்தார். அதுமட்டும் அல்ல ஸ்ரீதேவியின் பரிவாரங்களையும் பார்த்தார். இன்னும் என்ன? நான் பூலோகத்தில் தனி ஒருவன் அல்ல.

வைகுண்டத்தில் உள்ள பரிவாரங்கள் எல்லாம் பூலோகத்திற்கு வந்து விட்டதால் நான் இப்பொழுது குடும்பஸ்தனானேன்! என்று பூரிப்படைந்தார். தானே விரும்பி ஸ்ரீதேவி வருவதினால், இனி எந்த கவலையும் இல்லை என்று மகிழ்ச்சிக் கொண்டார். கீழே இறங்கி வந்த கருடாழ்வானைப் பார்த்து, ஸ்வாமி புஷ்கரணிக்கு மேற்கு பாகத்தில் வைக்கும்படி கூறினார்.

வராஹ மூர்த்தியான ஸ்வாமியைத் தரிசிப்பதற்கு வந்த தேவர் எல்லோரும் பயபக்தியுடன் அவரைப் போற்றி வணங்கினர். அந்தப் போற்றுதலை தரிகொண்ட வெங்கமாம்பாள் தண்டக வடிவத்தில் இயற்றினார்.

தெலுங்கு மூலம் :
பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் :
டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

தொடரும்....



# पाठ:पञ्च विंश: ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-25

| | | |
|---|---|---|
| कूप: = கிணறு | खादित्वा = தின்றுவிட்டு | खादितुम् = தின்பதற்கு, தின்பது |
| रामठम् = பெருங்காயம் | कर्तुम् = செய்வதற்கு | लवणम् = உப்பு, உப்பாக, உப்பை |
| गमनम् = போதல் | आगमनम् = வருதல் | आगच्छति = வருகிறான் |
| गच्छति = போகிறான் | नयति = செல்கிறான் | |

## வினாக்கள்

1. बालक: अस्मद्गृहे अन्नं खादित्वा गृहम् अगच्छत्।
2. अहं कूपस्य आरान् स्नानं कर्तुम् अगच्छम्।
3. त्वं कुत्र खादितुं गच्छसि?
4. कुत्रापि न गच्छामि।
5. अरे! युष्मद्गृहे लवणमस्ति रे?
6. लवणं किञ्चिदस्ति।
7. तर्हि शाकं कथं करिष्यसि?
8. शाके लवणं किमर्थं रे?
9. लवणं नास्ति चेत् शाकं सम्यक् न स्यात्।
10. अत: त्वं स्नानं कृत्वा शीघ्रं भोजनं कुरु।

1. நீ உங்கள் தந்தையை எங்கு அழைத்துக் கொண்டு செல்கிறாய்?
2. நான் என்னுடைய தம்பியின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்.
3. அங்கு எதற்கு?
4. சாப்பாடு செய்வதற்கு (சாப்பிடுவதற்கு)
5. அங்கு சாப்பிட்டு விட்டு இங்கு இருங்கள்.
6. உங்கள் தம்பி எங்கு இருக்கிறான்?
7. அவன் எங்கள் வீட்டு கிணற்றில் குளித்துக் கொண்டிருக்கிறான்.
8. உங்கள் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதாடா?
9. கொஞ்சம் இருக்கிறது ஆனால் நன்றாக இல்லை.
10. அப்படியானால் அங்கு எப்படி குளித்துக் கொண்டிருக்கிறான்?

## விடைகள்

1. சிறுவன் எங்கள் வீட்டில் அன்னம் தின்று விட்டு வீட்டிற்கு போவான்.
2. நான் கிணற்று அருகில் குளிப்பதற்காக போனேன்.
3. நீ தின்பதற்கு எங்குச் செல்வாய்?
4. எந்த இடத்திற்கும் செல்ல மாட்டேன்.
5. அடே! உங்கள் வீட்டில் உப்பு உள்ளதாடா?
6. உப்பு கொஞ்சமாக இருக்கிறது.
7. அப்படியானால் குழம்பு எப்படிச் செய்வாய்?
8. குழம்பில் உப்பு எதற்குடா?
9. உப்பு இல்லாமல் போனால் குழம்பு அநேகமாக நன்றாகஇருக்காது.
10. ஆகவே நீ குளித்து விட்டு விரைவாக சாப்பிடு.

1. त्वं तव पितरं कुत्र नयसि?
2. अहं मम अनुजस्य गृहं प्रति नयामि।
3. तत्र किमर्थम्?
4. भोजनकरणार्थम्।
5. तत्र अन्नं खादित्वा अत्र वस।
6. तव अनुज: कुत्र अस्ति?
7. स: अस्मद्गृहे कूपे स्नानं कुर्वन् अस्ति।
8. युष्मद् कूपे जलमस्ति वा रे?
9. किञ्चिदस्ति परं सम्यक् नास्ति।
10. तर्हि तत्र कथं स्नानं करोति?

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

## 29-04-2023 முதல் 01-05-2023 வரை
## திருமலையில் நடைபெற்ற
## ஸ்ரீபத்மாவதி-ஸ்ரீநிவாச
## பரிணய மஹோத்ஸவத் திருக்காட்சிகள்















# அஷ்டாங்க யோகம்

ஸ்ரீபதஞ்சலி முனிவர் யோகத்தின் எட்டு வழிமுறைகளை தொகுத்து அஷ்டாங்க யோகம் உருவாக்கினார். இது புலன்களை அடக்கி, வெளியுலகத்தின் மீது நாட்டம் கொள்ளாமல் மனதினை ஒருநிலைப்படுத்த உதவி செய்கிறது.



## இயமம்



அகிம்ஸா ஸத்யாஸ்தேய பிரஹ்ம சர்யா பரிக்ரஹா யமா:

–யோக சூத்திரம் 2–30

அஹிம்சை, சத்தியம், திருடாமை, பிரம்மசரியம், மனம் சம்பந்தப் பட்ட ஒழுக்க நியதிகள், பேராசையின்மை போன்ற அடிப்படை மனித பண்புகளை உணர்ந்தால் மட்டுமே யோகத்திற்கு தகுதி உடையவனாவான்.

## நியமம்



சௌச ஸந்தோஷதப: ஸ்வாத்யாயேச்வர ப்ரணிதானாநி நியமா:

–யோக சூத்திரம் 2–32

மனம் சார்ந்த ஒழுக்க கோட்பாடுகள், புறத்தூய்மை, அகத் தூய்மை, புனிதமான நூல்களை படித்தல், இறைவனிடம் முழு மனதுடன் சரணாகதி அடைதல், இன்பம்–துன்பத்தை சமமாக கருதுதல் போன்றவற்றை விளக்குகிறது.

## ஆசனம்



ஸ்திரசுகமாஸநம் –யோகசூத்ரம் 2–46

நிலையாகவும் வசதியாகவும் அமைவதே ஆசனமாகும். ஆசனம் செய்யும் முறை, ஆசன விதிமுறைகள் பெரியோர் களுக்கு, பெண்களுக்கு எவ்விதம் உதவுகின்றது என்பதை விளக்குகின்றது. நீரிழிவு, இரத்த அழுத்தம், கழுத்து வலி, மூட்டு வலி போன்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது.



## பிராணாயாமம்



தஸ்மின் ஸதி ஸ்வாஸப்ரஸ்வாஸயோர்கதிவிச்சேத: ப்ராணாயாம:

–யோக சூத்திரம் 2–50

காற்றினை உட்சுவாசிப்பது, காற்றினை வெளியிடுவது, மூச் சினை அடக்குவது போன்றவற்றை இது விளக்குகிறது. மேலும் ஆயுளை அதிகரிக்கவும், மனம் ஒருமைப்படவும், இதயம், நுரையீரலை பாதுகாக்கவும் செய்கிறது.



# அஷ்டாங்க யோகம்

யோக சூத்திரத்தை கடைபிடிக்க முடியாதபோது அஷ்டாங்க யோகத்தை ஒருமுறை அனுசரித்தாலே மனித வாழ்க்கையானது முழுமையடையும். ஸ்ரீபதஞ்சலி முனிவரின் அஷ்டாங்க யோகம் யோகாதினத்தை முன்னிட்டு வெளியிடப்படுகிறது.

## பிரத்யாகாரம்



ஸ்வவிஷயாஸம்ப்ரயோகே சித்தஸ்வரூபாநுகார இவேந்த்ரியாணாம் ப்ரத்யாஹார:
–யோக சூத்திரம் 2–54

புலன்கள் தம் விஷயங்களை விடுத்து, சித்த வடிவினை அடை வதே பிரத்யாகாரமாகும். இது உன்னதமான புலன் வசீகரம் ஆக்குகிறது. யோகி தன் புலன்களை வெளிப்புற வடிவங்களைப் பெறுவதைத் தடுத்து, மனதுடன் இணைக்க முடிந்தால், முழுமையான புலன் அடக்கத்தைப் பெறுவார்.



## தாரணை



தேசபந்தச்சித்தஸ்ய தாரணா
–யோக சூத்திரம் 3–1

மனதை ஏதோ ஓரிடத்தில் நிலைபெறச் செய்தலே தாரணை ஆகும். சரீரத்திலோ, வெளிப்புறமாகவோ அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்துதலே தாரணையாகும். தாரணை பிராணா யாமம் வாயிலாகவே கை கூடும்.

## தியானம்



தத்ர ப்ரத்யயைகநதா த்யாநம் –யோகசூத்திரம் 3–2

எண்ணத்தின் ஓட்டத்தினை நிலைநிறுத்துவதே தியானம். தலையின் மேல்பகுதி, இதயம் போன்றவற்றில் ஒரு இலக்கு நிறுவப்பட்டு உடலின் எந்தப் பகுதியிலிருந்தும் தொடுவதை விட இலக்குப் பகுதியிலிருந்து ஒருவர் தொட முடியும் என்றால் அந்த நிலை தாரணை எனப்படும். மனம் அப்படியே சில காலம் இருக்க முடிந்தால் அது தியானமாகும்.



## சமாதி



ததேவார்தமாத்ரநிர்பாஸம் ஸ்வரூபசூன்யமிவ ஸமாதி
–யோகசூத்திரம் 3–3

வடிவங்களை விடுத்து பொருளை மட்டுமே முன்னிருத்தப் பட்டால் அதற்கு சமாதி என்று பெயர். தியானத்தின் நோக்கம் வெளிப்புற நிலையினை நிலைநிறுத்துவதினால் சமாதி ஏற்படும். இந்நிலையில் சித்திக்கு வடிவமில்லை. இந்த சித்தியையே சமாதி என்பர்.



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு வருடந்தோறும் நடைபெறும் வருடாந்திர வஸந்தோத்ஸவம் 04-05-2023 முதல் 06-05-2023 வரை வைபவமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு அபிஷேகம், திருவீதி உலா, தங்கத்திருத்தேர் உற்சவங்கள் நடைபெற்றது





04-05-2023 அன்று ஆந்திர மாநிலம், பார்வதி புரம் மன்யம் மாவட்டம், சீதம்பேட்டையில் புதிதாக கட்டப்பட்ட ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற மஹா சம்ப்ரோக்ஷணம் மற்றும் திருக்கல்யாண மஹோத்ஸவ திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட விசாக சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர் திரு. வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்



04-05-2023 அன்று ஸ்ரீநரசிம்ம ஜயந்தி முன்னிட்டு திருமலையில் உள்ள வஸந்த மண்டபத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி பூஜை நடைபெற்றது



05-05-2023 அன்று திருமலைக்கு வருகை புரிந்த விசாக சாரதா பீடாதிபதி, உத்தர அதிகாரியை வரவேற்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மா ரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



29-04-2023 அன்று திருமலைக்கு வருகைப் புரிந்த மேதகு ஆ.மா. ஆளுநர் எஸ்.அப்துல் நஜீர் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப் படத்தை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் உடன் ஆளுநரின் முதன்மைச் செயலாளர் திரு. அனில்குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ்.



15-04-2023 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற திரு. சத்தியநாராயணா, ஆ.மா. இந்துசமய அறநிலையத்துறை ஆணையருக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. ஜெ.இ.ஒ.

# "கோவிந்தா" எனும் இதயத்துடிப்பை கேட்போம்!





திரு. அத்தி ரங்கராஜன்,
திருப்பதி, 98490 99246.

*"ஹ்ருதயே சுப்ரதிஷ்டிதஹ"* ஒருவரின் இதயத்தில்தான் இறைவன் குடி கொண்டிருக்கிறார் என்கிறது இந்த வாக்கியம்.

*"கோவிந்த ஹ்ருதயம் நித்யம் பாலானாம் ஹ்ருதயங்கமம்"* கோவிந்தனின் கருணை வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து சிறார்களின் இதயத்தை நோக்கி ஓடும் என்பது இதன் பொருள்.

இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு இதய துடிப்புக்குப் பின்னாலும் பகவான் ஸ்ரீவேங்கடேஸ்வரன் இருக்கிறான். சிறு இதயங்கள் துடிக்க மறந்தாலும், மறுத்தாலும், பழுதுபட்டாலும் அந்த விட்டுப்போன துடிப்புகளையும் அவன் கவனத்துடன் கேட்டுக் கொண்டே இருப்பான். தனது குழந்தைகளின் சிறு இதயங்களை மீண்டும் துடிக்கச் செய்ய அவன் ஆபத்பாந்தவனாக எழுந்தருளுவான். இப்பொழுது இதய நோய்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினர் தொடங்கிய "ஸ்ரீபத்மாவதி சிறுவர் இதய மையம்" அந்த இறைவனே நேரில் வந்து இதயங்களை பழுது பார்ப்பது போன்ற வியப்பை உண்டாக்குகிறது.

திருமலை அடிவாரத்தில் அலிபிரி என்கிற இடத்தில் நிறுவப் பட்டுள்ளது 70 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை.

மழலையும், புன்னகையும் மாறாத அந்தக் குழந்தைகளுக்கு தங்களுக்கு பிறப்பால் இதய நோய் உள்ளது தெரியாது. ஆனால் அவர்களின் பெற்றோர் முகத்தில் சோக ரேகைகள் படர்ந்து, கண்ணீர் உலர்ந்து போகிறது. கடக்கும் ஒவ்வொரு நிமிடமும் தங்கள் குழந்தைகளின் நாடித்துடிப்பு குறைந்து கொண்டே போனாலும், வேங்கடவனின் மீது இம்மிளவும் நம்பிக்கை குறையாமல் இங்கு ஓடோடி வருவதை நாம் காணலாம். குழந்தைகளுக்கு செய்யும் இது போன்ற இருதய அறுவை சிகிச்சைக்காக சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் போன்ற மாநகரங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் இப்பொழுது திருப்பதியில் இந்த மேன்மை மிகுந்த சிகிச்சை கிடைக்கிறது.

அதுமட்டும் இல்லாமல், மிகுந்த பொருட்செலவுடன் கூடிய இது போன்ற மருத்துவம், ஸ்ரீவேங்கடேஸ்வர பிராணதான அறக்கட்டளையின் மூலம் இங்கு இலவசமாகச் செய்யப்படுகிறது என்பதை அறிந்த பெற்றோர், மிகுந்த நம்பிக்கையுடன் ஏழுமலையானின் பாத கமலங்களை நோக்கிப் பயணம் தொடங்குகிறார்கள்.

குழந்தைகளின் இருதய அறுவை சிகிச்சைக்காகவே இந்தியாவில் நிறுவப்பட்ட மிகச் சிலவற்றில் இந்த மருத்துவமனை ஒன்று. இந்த மருத்துவமனை வளாகத்துக்காகவும், இங்குள்ள அதிநவீன மருத்துவ கருவிகளுக்காகவும் திருப்பதி தேவஸ்தானத்தினர் 25 கோடி

ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்தனர். இங்குள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் 40 படுக்கைகள் உள்ளன. மற்றும் மூன்று லாமினார் புளோ ஆபரேஷன் தியேட்டர்கள் உள்ளன. இதனால் நோய்த் தொற்று பரவுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. இங்குள்ள நவீன கேத்லேப் மிகவும் குறைந்த அளவில் கதிர் வீச்சு வீசும் என்பதால் குழந்தைகளுக்குப் பாதுகாப்பானது.

புதிதாக நிறுவப்பட்ட மருத்துவமனை என்றாலும் இதன் புகழ் திக்கெட்டிலும் பரவி, ஒவ்வொரு நாளும் 40 லிருந்து 50 குழந்தைகள் வரை சிறிய மற்றும் பெரிய குறைபாடுகளை அறிய மற்றும் சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர். ஒவ்வொரு குழந்தையின் நோயின் தீவிரத்தைப் பொறுத்து அறுவை சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. ஒவ்வொரு நாளும் 4லிருந்து 5 அறுவை சிகிச்சைகள் வரை எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதுவரை இந்த மருத்துவமனையில் கிட்டத்தட்ட 700 க்கும் மேற்பட்ட குழந்தைகளின் இதயத்துடிப்பு சரிசெய்யப்பட்டு இருக்கிறது. இந்த சிகிச்சைகளில் 95% வெற்றி கண்டு, அந்தக் குழந்தைகள் பரிபூரண ஆயுளுடன் வீடு திரும்பியிருக்கின்றனர். இங்கு நோயாளிகள் சிறுவர்கள். அதிலும், பிறந்து சில வாரங்களோ, மாதங்களோ ஆன குழந்தைகள்தான் மிக அதிகம். இவர்களுக்கு நோய் உண்டானதோ இதயத்தில் என்பதால், இங்கு எடுத்துக் கொள்ளப் படும் எல்லா சிகிச்சையுமே மிகவும் கவனமுடன்






கையாளப்படுகிறது. குழந்தைகளுக்கு இருதய சிகிச்சை என்பது ஒரு உயர் சிறப்பு மருத்துவம், இதில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் அதிகம் பேர் இல்லை என்ற நிலையில், இங்கு மருத்துவர் களுக்குப் பயிற்சி அளிப்பது மிகவும் கடினமான ஒரு விஷயம். இதை சவாலாக ஏற்ற மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஸ்ரீநாத் ரெட்டி, குழந்தைகள் நல மருத்துவர்களையும், இருதயம் சார்ந்த மருத்துவர் களையும் கொண்ட ஒரு குழுவை உருவாக்கி, இந்தக் கடினமான அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள அவர்களை ஊக்குவித்து வருகிறார்கள். உயர் சிறப்பு தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், அனஸ்தீசியா நிபுணர், பர்பியூஷன் நிபுணர் மற்றும் செவிலியர்கள் நிறைந்த 15–20 பேர் கொண்ட குழு ஒவ்வொரு அறுவை சிகிச்சையினையும் சிறப்புடன் கையாளுகிறது.

தேவஸ்தானத்தினர் இந்த ஸ்ரீபத்மாவதி குழந்தைகள் இருதய மையத்தை இப்பொழுது 100 படுக்கைகள் கொண்ட பன்னோக்கு மருத்துவமனையாக மேம்படுத்த திட்டமிட்டிருக்கின்றனர். இருதய சிகிச்சை மட்டுமல்லாமல் வரும் நாட்களில் இங்கு எலும்பு மஜ்ஜை அறுவை சிகிச்சையும் செய்யப்படும். இந்த மருத்துவமனைக்கு நன்கொடைகளை அளிக்க ஊக்குவிக்கும் வகையில் திருப்பதி தேவஸ்தானம் பல்வேறு சலுகைகள் அறிவித்திருக்கின்றன. இதற்காக ஒரு கோடி ரூபாய் அளிக்கும் பக்தர்களுக்கு திருமலை கோயிலில் உதயாஸ்தமன சேவையில் பங்கேற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

வாருங்கள். இந்தச் சிறு இதயங்களின் துடிப்பை கேட்போம். கோவிந்தா என்று அவை எதிரொலிப்பதை உணர்வோம்.



# மேகங்களே, என் துயரத்தை கூறுங்கள்

நாச்சியார் திருமொழியின் ஒவ்வொரு பாசுரமும் நயமானது. ரசமானது. எம்பெருமானை நினைத்துத் துடிக்கும் ஆண்டாள் நாச்சியார், அவனை எப்படியாவது அடைய வேண்டும் என்று நினைக்கின்றாள். "வேங்கடவர்க்கு என்னை விதி" என்று சொன்னவளல்லவா? எந்தப் பொருளைப் பார்த்தாலும் அவன்தான் நினைவுக்கு வருகின்றான். எதைப் பார்த்தாலும் அவனுடைய முகம்தான் நினைவுக்கு வருகிறது.

அது கார்காலம். மழை மேகங்கள் தவழ்ந்து வருகின்றன. அது வடக்கே இருந்து வருவதால் வேங்கடவனை பார்த்து விட்டுத்தான் மேகங்கள் வருவதாக நினைக்கிறாள்.

அந்த பாக்கியம் தனக்கு இல்லையே என்று நினைக்கிறாள்.

ஏதாவது செய்தாக வேண்டுமே. அந்த மேகங்களையே தூது விடுகிறாள். அகத்துறை இலக்கியங்களில் "மேக விடு தூது" வுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.

"மேகங்களே! உங்களோடு அந்த திருவேங்கடவனும் வருகின்றானோ... அவன் இல்லாமல் நான் எப்படி உயிர் வாழ்வேன்? அவனோடு சேர்ந்தால்தான் என்னுடைய உயிர் நிலைத்திருக்கும். இதை அவனிடம் கொஞ்சம் சொல்லி என்னை ஏற்கும்படிச் செய்யுங்கள்" என்று மேகங்களிடம் வேண்டுகின்றாள்.



ஆண்டாளின் மேகவிடு தூது அதி அற்புதமான நயம் செறிந்த இலக்கியம். இதில் உள்ள ஒவ்வொரு பாசுரமும் ஆண்டாளினுடைய பக்தியின் ஆழத்தை நமக்குத் தெரிய வைக்கும். பத்து பாடல்களில் தூது இலக்கிய வித்தைகள் செய்கிறாள். அதிலே ஒரு அற்புதமான பாடல்தான் கீழே கொடுத்திருக்கக் கூடிய பாசுரம்.

*சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில் காள்! மாவலியை*
*நிலங்கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்காள்!*
*உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்து என்னை*
*நலங் கொண்ட நாரணற்கென் நடலை நோய் செப்புமினே.*

**– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி.**

நடலை நோய் என்று ஒரு நோயை ஆண்டாள் சொல்லுகின்றாள். இந்த "நடலை" என்பதற்கு பலவிதமான பொருட்கள் உண்டு. இந்த நோய் சாதாரண பரிசோதனைகளில் எல்லாம் தெரியாது. ஆனால் அந்த நோயினுடைய விளைவு வெளிப்படையாகத் தெரியும்.

உடம்பு வெளுத்திருக்கிறது. மனதில் ஒரு விதமான சோர்வு. மயக்கம், தயக்கம் இருக்கிறது. நாளுக்கு நாள் இந்த நோய் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இவளுடைய உடலையும் மனதையும் பலவீனப் படுத்திக் கொண்டே இருக்கிறது. எதுவும் சாப்பிடப் பிடிக்கவில்லை. "உண்ணா நாள்" என்பது அவனை "எண்ணா நாள்" தான். அவனோடு கலக்காத நாள் பட்டினி நாள்தானே. ஆனால் இந்த நோய்க்கு என்ன மருந்து என்று அவளுக்குத் தெரிகிறது. இந்த நோயைத் தீர்க்கும் மருத்துவன் யாரென்றும் தெரிகிறது. அவனுக்கும் இவளுக்கும் உள்ள உறவு முறையும் தெரிகிறது.






அதனால்தான் கடைசி வரியில் அழகாகச் சொல்லுகின்றாள்.


"தன் வரையில் நன்றாக இருக்கும் அவனிடத்திலே, என் நோயைப் பற்றிச் சொல்லுங்கள். அவன் என்னைப் பற்றிக் கவலைப்பட்டால்தானே என்னுடைய நோயின் துன்பம் தெரியும். ஆனால் அவன் நலம் கொண்ட நாரணனாக இருக்கின்றான். அவனுக்கு என் நோயைப் பற்றிப் புரியவில்லை".

இன்னொரு பொருள். "நான் நன்றாகத்தான் இருந்தேன். ஆனால் என்னுடைய பலத்தை எல்லாம் அவன் உள்ளே புகுந்து தான் எடுத்துக் கொண்டான். நான் மெலிந்து போனேன். இதற்கு ஒரு அழகான உதாரணத்தை ஆண்டாள் காட்டுகின்றாள். ***"உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்து என்னை"*** என்பது பாசுர வரி.





உலங்கு என்பது பெரிய கொசு போன்ற ஒரு பூச்சி. இது விளாம் பழத்தினுடைய சாற்றினை எல்லாம் உறிஞ்சி எடுத்து விட்டு, அந்தப் பழத்தை ஒன்றும் இல்லாமல் செய்து விடும். அதைப்போல் இந்த நாரணன், என் உள்ளே புகுந்து, என்னுடைய பெண்மையை உண்டு, என்னை மெலியும்படி செய்து விட்டானே" என்று பாடுகிறாள். சரி, இப்படிச் செய்தவன் யார் என்றால், அவன்தான் திருவேங்கடத்தில் இருப்பவன்.



"நான் இங்கு ஆற்றாமையால் துடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவன் குளிர்ந்த மேகங்கள் பரவி நிற்கும் அற்புதமான திருவேங்கட மலையின் மீது இருக்கின்றான். ***"குளிர் அருவி வேங்கடம்"***, ***"தண் திருவேங்கடம்"*** என்றெல்லாம் திருவேங்கட மலையின் குளிர்ச்சியைப் பற்றி ஆழ்வார்கள் பாடி இருக்கின்றார்கள் அல்லவா.

அதுவும் இது மேகங்கள். சூல் கொண்ட மேகங்கள். சமுத்திரத்தில் உள்ள நீரை வாரிப் பிடித்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் கருத்த மேகங்கள். ஆழியுள் புக்கு முகர்ந்து கொடு ஆர்த்து ஏறிய மேகங்கள். கடல் நீரை வயிறார முகர்ந்து கொண்டு, பசியாறி, கிளர்ந்து எழுந்திருக்கின்றன. ஆனால் இவளோ தளர்ந்து இருக்கிறாள்.

கிளர்ந்தெழுந்த மேகங்களிடம் தன் தளர்ச்சியைச் சொல்லுகின்றாள். அந்த மேகங்கள் கீழே இறங்கி, கடல் நீரை குடித்து விட்டு, கருத்த மேகங்களாக மேலே எழுந்தது, எப்படி

இருக்கிறது என்றால், ஒரு காலத்திலே மாண் குறள னாய் வந்து, மூன்றடி நிலம் கேட்டு, மாவலியிடம் அந்த நிலத்தை யாசகம் பெற்றுக் கொண்டு,ஓங்கி உலகளந்த உத்தமனாய், விண் முட்ட திருவிக்கிரம அவதாரமாக எழுந்தானே, அதைப் போல, பெருமான் திருவேங்கடத்தில் இருக்கின்றான்.மேகங்கள் மேலே எழுந்திருக்கின்றன. அந்த மேகங்கள் இருக்கக்கூடிய வேங்கட வாணனும் திருவிக்கிரமனாக அவதாரம் எடுத்து வளர்ந்திருக்கிறான். (நெடியானே, வேங்கடவா – குலசேகர ஆழ்வார்) நானோ அவனை அடைய முடியாமல் தவிக்கிறேன். அதே சமயம் அவன் என் உள்ளே புகுந்து எனக்கு முகம் கொடுக் காது, என் ஆற்றாமையை வளரச் செய்ததினால் தளர்ந்திருக்கின்றேன். என்னுடைய தளர்ச்சியை அவனிடத்திலே சொல்லுங்கள்.

இதில் ஒவ்வொரு வரியிலும் வருகின்ற வார்த் தைகளின் எதுகை அமைப்பும், சந்த அழகும் எண்ணிப்பாருங்கள். *''சலங்கொண்டு நிலங்கொண்ட, உலங்குண்ட, நலங்கொண்ட...''* என்ற எதுகை நயத் தில் ஆண்டாளின் அற்புதத் தமிழும், வேங்கடவனின் அருள் மணமும் நம்மிடம் பரவும். இனி, இந்தப் பாசுரம் குறித்த, ஆசார்யர்களின் வாக்கை சற்று அனு பவிக்கலாம். இதிலும் முன்னடிகளிரண்டும் மேகவிளி. “கடலில் நீரை முகந்து கொண்டு கிளம்பின குளிர்ந்த மேகங்களே! என்றது – உங்களுடைய வடிவழகும் குளிர்ச்சியுமெல்லாம் போக்யமாகத் தானிருக்கிறது.

அதில் ஒரு குறையில்லை என்றபடி பின்னை எந்த அம்ஸத்தில் குறையுள்ளதென்றால் அது தோன்றச் சொல்லுகிறாள். *''மாவலியை நிலங் கொண்டான் வேங்கடத்தே நிரந்தேறிப் பொழிவீர்கள்!''* என்று ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காகத் தன்னை யாசகனாக்கிக் காரியம் செய்த பெருமான் எழுந்தருளியிருக்கிற தேஸத்திலே வர்த்திக்கிற நீங்கள் அநந்யப்ரயோஜனையான் எனக்காகக் காரியஞ்செய்ய வேண்டாவா? எம்பெருமான் அஸுரன் பக்கலிலே போய்க் காரியம் செய்ததுபோல் நீங்களும் ஒரு அஸுரன் பக்கலிலே போய்க் காரியஞ் செய்ய வேணுமென்று நான் சொல்லுகிறேனோ? உடையவன் பக்கலிலேயன்றோ உங்களைப் போகச்சொல்லுகிறேன். என் காரியத்தைச் செய்யா தது உங்களுக்குக் குரையன்றோ என்கை. (ஏறிப் பொழிவீர்காள்!) சாய்கரத்தை உயர வைத்துத் தண்ணீர் வார்ப்பாரைப் போலே, காணவே விடாய் கெடும்படி உயரவேறி வர்ஷிக்கிறிகோளிறே, அவன் வர்த்திக்கிற தேஸத்திலே வர்த்தித்து அவனோடே உங்களுக்கு ஒரு ஸம்பந்தமுண்டானால் அவன் ஸ்வ பாமுண்டாக வேண்டாவோ?” என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

பாசுரம் அறிவோம்...



## ஏகாதசியின் மகிமை

**தேவர்களும், அசுரர்களும் அமுதம் கடைந்த தினமும் ஏகாதசி தினமாகும். மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது, கருமமே கண்ணாக இடைவிடாது ஸ்ரீஸூக்த ஜபத்துடன் பாற்கடலைக் கடைந்தனர். இதனால் ஏகாதசி விரதம் அனுஷ்டித்து வரலாயினர். மறுநாள் வைகறைப் பொழுதில் பாற்கடலினின்றும் பிராட்டி ஆவிர்பவித்தாள். அன்று முதல் பிராட்டியின் அவதார தினத்தை புண்ணியதினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்ற பகவானுடைய ஆக்ஞையின் பேரில் பிரும்மா முதலிய தேவர்கள் முதல் தினமாகிய ஏகாதசி அன்று உபவாசம் இருந்து, துவாதசி தினத்தில் வைகறைப் பொழுதில் பகவானுக்கும் பிராட்டிக்கும் திருவாராதனம் செய்து பாரணைகளை நடத்தி வந்தார்கள் என்று புராணங்கள் கூறுகிறது. ஆகையினால் இந்த இரு தினங்களையும் திருமாலின் தினங்களாக ஏற்று விரதம் அனுஷ்டிக்கின்றோம்.**

**- திரு.கிருஷ்ண துளசி, சென்னை.**

108 திவ்ய தேசம்





# திரு அட்டபுய கரம்

*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*



**புராண வரலாறு :**

பிரமன் காஞ்சியில் செய்யத் தொடங்கிய வேள்வியைத் தடை செய்ய, மிகவும் கொடிய அரக்கர்களையும், காளியையும், தனது ஆற்றலால் சரஸ்வதி அனுப்பியபோது, பிரமனுக்கு அருள் செய்ய வேண்டி, எம்பெருமான் எட்டு திருக்கரங்களுடன் அவதரித்த திருத்தலம். யாகத்தைத் தடுக்கும் முயற்சியில் சிவபிரான் அனுப்பிய சரபம் என்ற பெயரில் எட்டு கால்களைக் கொண்ட ஒரு பெரும் பறவை இங்கு, எம்பெருமானைக் கண்டு சரண் அடையவே, திருக்கோயிலின் வாயு மூலையில், சரபேசன் என்கிற பெயரில், யாக சாலையை அது பாதுகாக்கத் தொடங்கியது. எம்பெருமான் சிங்கப்பிரானாக அவதாரம் செய்ததைக் கேட்டு, அப்பெருமானுடன் போரிட்டு அடக்கி விடலாம் என்று அங்கு வந்த சரபம், பெருமான் எட்டு திருக்கரங்களுடன் விளங்குவதைப் பார்த்து அஞ்சிச் சரண் அடைந்ததாகவும் சொல்வர்.

இந்தத் திருக்குளம் கஜேந்திர புஷ்கரணி என்று பெயர் பெற்றிருப்பதால், கஜேந்திரனின் கூக்குரலைக் கேட்டு, அரை குலையத் தலைகுலைய எம்பெருமான் கருட வாகனனாகப் பதறி ஓடி வரும்போது, கஜேந்திரனைக் காக்கும் ஆர்வத்தில், எம்பெருமான் எட்டு திருக்கரங்களுடன் அவதரித்தான் என்றும் கூறுவதுண்டு.

**சிறப்புகள் :**

பரகால நாயகி கூறுவதாக அமைந்த அட்டபுய கரப் பாசுரங்களில், எம்பெருமானின் அவதாரத் திருக்கோலங்களை எல்லாம், மிகச் சிறப்பாகத் தான் கண்டதாகக் கூறும் நாயகிக்கு “இவர் யாராய் இருப்பார்?” என்று ஐயம் ஏற்படுகின்றது. இவர் யார் என்று கேட்பதை அறிந்த எம்பெருமான், ஒரு முறைக்கு ஒன்பது முறையாக, “யான் அட்ட புயகரத்தைச் சார்ந்தவன்” என்ற பொருளில், “அட்டபுயகரத்தேன்” என்று அருளி இருப்பது ஆழ்வார்க்கு இத்தலத்தில் ஏற்பட்ட தனி அனுபவம் ஆகும்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | ஆதி கேசவப் பெருமாள், கஜேந்திர வரதன், சக்ரதரர், (ஆழ்வார் திருவாக்கில் அட்ட புய கரத்தான்) |
| மூலவர் | : | எட்டு திருக்கரங்கள், உத்ஸவர் – நான்கு திருக்கரங்கள், (மேற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| தாயார் | : | அலர்மேல்மங்கை, பத்மாஸனி |

புஷ்கரணி : கஜேந்திர சரஸ்.
தீர்த்தம் கஜேந்திர புஷ்கரணி.
விமாநம் : ககனாக்ருதி விமானம், சக்ராக்ருதி விமானம், வியோமாகர விமானம்.
ப்ரத்யக்ஷம் : கஜேந்திரன்.
ஆகமம் : பாஞ்சராத்ரம்.
மங்களாசாஸனம் : பேயாழ்வார், திருமங்கை ஆழ்வார்.

**விசேஷம் :**

திருமங்கையாழ்வார், திருவேங்கட நாதனைப் பாசுரம் இடும்போது, "எண் கையான்" என்று இத்தலத்தைச் சொல்கிறார். திருமங்கை மன்னன், பத்துப் பாசுரங்களைப் பாடி இருப்பதை, "ஆழ்வார் எம்பெருமானை அநுபவிக்கும் விதங்களில் இது ஒரு ஆச்சரியமான விதம் என்று உணர்க" என்று பிரதிவாதி பயங்கரம் ஸ்வாமி தமது விளக்கத்தில் கூறி உள்ளார். 108 திவ்ய தேசங்களில் இத்தலத்தில் மட்டுமே எம்பெருமான் எட்டு திருக்கரங்களுடன் விளங்குகிறார். தொண்டை நாட்டுத் திவ்ய தேசங்களில் இங்கு மட்டுமே பரமபத வாயில் உள்ளது.

இந்த சந்நிதியில் உள்ள வராகப் பெருமானின் திருமேனி மிகவும் அபூர்வம். தனது இடப் பக்கத்தில் நிலமகளை அமர்த்திக் கொண்ட இப்பெருமான், "செம்மை உடைய திருக்கரங்களால் தாள் பற்றி" என்றபடி பூமி தேவியின் திருவடியைப் பற்றிக் கொண்டிருக்கும் காட்சி, மிகச் சிறப்பான ஒன்று.

எட்டு திருக்கரங்கள் உள்ள இத்தலத்துப் பகவானுக்கு எட்டு சுலோகங்கள் அடங்கிய "அஷ்ட புஜாஷ்டகம்" ஸ்ரீ நிகமாந்த மாஹ தேசிகன் அருளி உள்ளார்.

**த்யானச்லோகம் :**

*தேவோ ஹ்யஷ்ட புஜோ கஜேந்த்ரவரத: பத்மோபரிஸ்தாதவ: |*
*வ்யோ மாகார விமாந மண்டி ததநு: சக்ராயுதோத்யத்கர:*
*தீர்த்தே தந்தி ஸரோவரஸ்ய கருணாமூர்த்தி: ப்ரதீச்முக:*
*யோரக்ஷத் க்ராஹ பீடிதம் த்விபவரம் ஸத்வாதி மூலோஹரி: ||*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம் :**

*"தொட்ட படை எட்டும் தோலாத வென்றியான்*
*அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று - குட்டத்துக்*
*கோள்முதலை துஞ்சக் குறித்து எறிந்த*
*சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச் சார்வு."*

- பேயாழ்வார்

*"திரிபுரம் மூன்று எரித்தானும்*
*மற்றை மலர்மிசை மேல் அயனும் வியப்ப,*
*முரிதிரை மா கடல் போல் முழங்கி*
*மூவுலகும் முறையால் வணங்க*
*எரியன கேசரி வாள் எயிற்றோடு*
*இரணியன் அகம் இரண்டு கூறா*
*அரி உருவாம் இவர் ஆர் கொல்? என்ன,*
*"அட்டபுயகரத்தேன்" என்றாரே."*

- திருமங்கையாழ்வார்

*"என்றும் துயர் உழக்கும் ஏழைகாள்! நீங்கள் இளம்*
*கன்று போல் துள்ளிக் களித்திரீர் - அன்று நடம்*
*இட்ட புயங்கத்து இரு சரணமே சரண் என்று*
*அட்ட புயங்கத்தற்கு ஆளாய்."*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

711. *ஓம் ஸந்திவாஸ: நம:*

நல்லோர்கட்குத் தங்கும் இடமானவன் .

*ஓம் பரமோத்ஸாஹா நம:*

தன்ஸங்கல்பத்தால், அனைத்து உலகையும் ஆதரத்துடன் படைப்பவள்.

712. *ஓம் ஸுயாமுந: நம:*

யமுனையில் செய்த ஜலக்கிரீடை போன்ற நற்செயல்களை உடையவன்.

*ஓம் ஸ்ரீமதீ நம:*

ஜீவராசிகள் நல்வழி அடைய தம்மிடம் வரும் வாய்ப்பாக வேதங்களை அவர்களுக்கு அளிக்க உள்ளவன்.

713. *ஓம் பூதாவாஸ: நம:*

எல்லா ஜீவன்களும் எளிதில் அடையும் படியாக இருப்பவன்.

*ஓம் ஸ்ரீபதி: நம:*

இத்தகைய நல்ல சிந்தை உடைய திருவுக்கும் திருவானவரை நாயகனாக உடையவள்.

*714. ஓம் வாஸுதேவ: நம:*

வாஸுதேவன் என்கிற வ்யூஹத்தில் இருப்பவன்.

*ஓம் ச்ருதி: நம:*

ப்ரத்யக்ஷம், அனுமானம் இவைகளால் அறிய முடியாத தன்னை அறிய வேதங்களை சாதனமாக உடையவள்.

*715. ஓம் ஸர்வாஸுநிலய: நம:*

எல்லா ஜீவன்களுக்கும் புகலிடம்.

*ஓம் ச்ரயந்தீ: நம:*

அடியார்களைப் பகவானிடம் சேர்ப்பிக்க அதற்காகவே அவரைச் சார்ந்து இருப்பவள்.

*716. ஓம் அநல: நம:*

பக்தர்களுக்கு எவ்வளவு க்ருபை செய்தாலும் போதாது என்று நினைப்பவன்.

*ஓம் ச்ரீய மாணா: நம:*

எளிதில் ஆச்ரயிக்கப்படுபவள்.

*717. ஓம் தர்ப்பஹா நம:*

அற்புதச் செயல்களால் இந்திரன் முதலோரின் செருக்கை அழித்தவன்.

*ஓம் க்ஷமா: நம:*

அடியார்களின் பெரும் குற்றங்களையும் க்ஷமிப்பவள் – மன்னிப்பவள்.

*718. ஓம் தர்ப்பத: நம:*

தன்னைத் தோத்தரிக்கும் பக்தர்கட்கு அதற்கான வலிமையை அளிப்பவன்.

*ஓம் விச்வரூபா: நம:*

விச்வரூப பகவானைப் போல, தானும் எங்கும் உள்ளதாக விச்வரூபவஸ்வரூபி.

*719. ஓம் அத்ருப்த: நம:*

அனைத்தும் இருந்தும் சர்வமே இல்லாதவன்

*ஓம் ப்ரஸாதிநீ: நம:*

சீறியருளும் பகவானைப் போல் அல்லாமல் ஜீவன்களுக்கு அருளும் சிந்தையுள்ளவள்.

*720. ஓம் துர்த்தா: நம:*

துஷ்டர்களால் அறிந்து பிடிக்க முடியாதவன்.

*ஓம் ஹர்ஷிணீ: நம:*

அடியார்களின் சிறிய கைங்கர்யத்தையும் பெரிதாகக் கொண்டு உகப்பவள்.

*ஸ்ரீமதே பத்மாஸநீநாயிகா (அலர்மேல் மங்கை) ஸமேத*

*ஸ்ரீஅஷ்டபுஜகர ஆதிகேஸவ (கஜேந்திர வரதன்) பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

காஞ்சிபுரம் தேவப்பெருமாள் தேரடி அருகில், ரங்கசாமி குளத்தின் அருகே இந்த திவ்யதேசம் உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*




திருமலையில் நடைபெறும் ஜ்யேஷ்டாபிஷேகத்திற்கு “அபித்யேயக அபிஷேகம்” என்ற பெயரும் உண்டு. திருமலையப்ப ஸ்வாமியையும் ஸ்ரீதேவி, பூதேவித் தாயார்களையும் பாதுகாப்பாக மூடியிருக்கும் அபித்யேயக கவசங்கள் என்ற பெயர் கொண்ட இந்தக் கவசங்களை யாராலும் அழிக்க முடியாது என்பதால் இப்பெயர் ஏற்பட்டு உள்ளது. மேலும் கலியுகத்தின் தீமைகளிலிருந்து தன் பக்தர்களை காக்கும் பொருட்டு திருவேங்கடவன் யாராலும் அழிக்க முடியாத கவசங்களோடு பூலோகத்திற்கு வந்ததாகத் தலபுராணம் தெரிவிக்கிறது. எனவே இந்தக் கவசங்களை நன்கு பாதுகாக்கும் பொருட்டும், உற்சவ பேரரின் தெய்வ சான்னித்தியம் அதிகரிக்கும் பொருட்டும் ஜ்யேஷ்டாபிஷேத்தின்போது சிறப்பான சடங்குகள் செய்யப்படுகின்றன.



ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# பெரிய திருமலை நம்பி

- ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972.

பெரிய திருமலை நம்பி என்னும் ஆசார்யர் திருமலையில் வைகாசி மாதம் சுவாதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். ஸுமுகர் என்னும் நித்ய ஸூரியின் அம்சமாவர். பெரிய திருமலை நம்பிக்கு ஸ்ரீசைல பூர்ணர், உத்தம தேசிகர் என்ற திருநாமங்களும் உண்டு. ஆங்கீரஸ கணத்திலே பாரத்வாஜ கோத்ரத்தில் பிறந்த இவர் இராமாநுஜருடைய அம்மானாவார். இராமாநுசர் திருமலையில் எம்பெருமானைச் சேவித்து, கீழ்த் திருப்பதிக்கு எழுந்தருளி அம்மானான பெரிய திருமலை நம்பி திருமாளிகையில் ஒரு வருட காலம் 24 தடவை ஸ்ரீராமாயணம் விசேஷார்த்தங்களைக் கேட்டு வந்தார்.

வைகாசி சோதிநாள் வந்துதித்தான் வாழியே
வண்திருவேங்கடமுடையான் வரபுத்திரன் வாழியே
அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடிதொழுவோன் வாழியே
அனவரதம் மலைகுனியர்க்கு அடிமை செய்வோன் வாழியே
மெய்யன் இராமாநுசாரியன் விரும்புமவன் வாழியே
மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான் வாழியே
செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன் வாழியே
திருமலை நம்பிகள் உபயதிருவடிகள் வாழியே

## பதவுரை

வைகாசி – வைகாசி மாதம், சோதிநாள் – சுவாதி நக்ஷத்ரத்தில் – வந்து உதித்தான் – வந்து அவதரித்தவரான பெரிய திருமலை நம்பிகள், வாழியே – வாழ வேண்டும். வண் திருவேங்கடமுடையான் – வள்ளலான திருவேங்கடமுடையான். வரபுத்திரன் – வர ப்ரஸாதமாகப் பிறந்த பிள்ளையான திருமலை நம்பி. அய்யன் – உயர்ந்தோனான, ஸ்ரீஆளவந்தார் – திருவுடைய ஆளவந்தார் என்னும் ஆசார்யர், அடிதொழுவோன் – திருவடிகளை வணங்குபவர். அனவரதம் – இடைவிடாமல், மலைகுனியர்க்கு – மலைகுனிய நின்ற பெருமாளான மலையப்பனுக்கு, அடிமை செய்வோன் – கைங்கர்யம் செய்பவர். மெய்யன் – உண்மையானவரான இராமாநுசார்யர் – இராமாநுசன் என்னும் ஆசார்யரால், விரும்புமவன் – விரும்பப்படுமவர். மிக்க – உயர்ந்த, திருமலையார்க்கு எல்லாம் – திருமலையில் வாழ்பவர்க்கெல்லாம், மேலாவான் – சிறந்தவரானவர். செய்ய தமிழ் வேதத்தின் – அழகான தமிழ் வேதமான திவ்ய ப்ரபந்தத்தின் சிறப்பறிந்தோன் – சிறப்பை அறிந்தவர். திருமலை நம்பிகளின் இரு திருவடிகளும் பல்லாண்டு வாழ வேண்டும்.

## சிறப்புரை

(வைகாசி சோதிநாள் வந்துதித் தான் வாழியே) வைகாசி மாதமானது மாதவ மாதம் எனப்படும். நக்ஷத்ர வரிசையில் பதினாறாவது நக்ஷத்ரம் ஆகும். ஆகையாலே மலரும் போதான அழகை உடையதாய் இருக்கும் நம்மாழ்வார் அவதரித்த மாதமுமாகும். வடமொழியில் ஸ்வாதி என்ற சொல் தமிழில் சோதி ஆயிற்று. இது வாயுவை தேவதையாகக் கொண்ட நக்ஷத்ரம். கடலில் முத்துச் சிப்பியில் சுவாதி அன்று முத்துப் பிறக்கும். முத்து உள்ளும் புறமும் தூய்மை பெற்றது. அவ்வாறே நம்பிகளும், உள்ளமும் உடலும் தூய்மை பெற்றவர். நம்பிகளுக்கு இத்தன்மை வந்தமைக்குக் காரணம் சுவாதி நக்ஷத்ரத்தின் பெருமை

ஆகும். *''ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸ்ராமாயண தேசிகம். வந்தே ஸ்ராசைலபூர்ணார்யம் மேஷே ஸ்வாதீ ஸமுத்பயம்''* என்ற தனியனில் திருமலை நம்பிகள் சித்திரை மாதத்தில் ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் தோன்றியதாக ப்ரபந்நாம்ருதம், பெரிய திருமுடி அடைவு ஆகிய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

(வண் திருவேங்கடமுடையான் வரபுத்திரன்) – வண்மையாவது அழகும் வள்ளல் தன்மையும்– வேங்கடமானது 108 திவ்ய தேசங்களுள் வட நாட்டிலுள்ள பன்னிரண்டினுள் முதலானதும் தன்னை அடைந்தவர்களது பாபமனைத்தையும் ஒழிப்பதனால் வேங்கடம் என்று பெயர் பெற்றது என்பர். வேம்–பாபம், கடம்–எரித்தல். திரு என்பது பல பொருள் ஒரு சொல்லாகி வேங்கடத்துக்கு அடை மொழியாகி மகிமைப் பொருளைக் குறிப்பதாகும். திருவேங்கடத்தை வாசஸ்தானமாக உடையவன் திருவேங்கடமுடையான்.

பெரியாழ்வார் *''சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்''* என்று அருளியது காண்க. திருமலையில் கொடுமுடிகள் ஆகாயத்திலே முட்டி நிற்கும். இத்தால் நித்யவிபூதிக்கும் இந்த உலகருக்கும் முகம் காட்ட நிற்கிற நிலையாகத் தோற்றுகிறது என்பர் பெரியவாச்சான் பிள்ளை. மேலும் உதயகிரியில் ஆதித்யன் கிளம்பினால் எல்லார்க்கும் பிரகாசிக்குமாபோலே, திருமலையில் நிற்கிற நிலை விண்ணாடும் மண்ணாடும் கண்டு வாழ்கைக்காகவன்றோ என்பர். பெரியாழ்வாருடைய குலதெய்வம் திருவேங்கடமுடையான் என்பர் பெரியோர். பிரம்மாண்ட புராணம் வேங்கடாசல மான்மியப் பகுதியிலும் முதல் அத்தியாயத்திலும் உள்ள ப்ருகு – நாரத உரையாடலில் நாரதர், திருமகள் மணவாளன் எந்த மலையில் தனது வைகுந்தத்தையும் விட்டு வந்து திருமகளோடு கூடி இனிதே இருந்து கொண்டு தேவர்கள் அனைவராலும் பூஜிக்கப்படுகிறாரோ, அந்தத் திருவேங்கடம் பாபத்தைப் போக்கிப் புண்ணியத்தையும் ஒன்று பத்தாக்கி வளர்க்க வல்லது என்று அருளியதனால் திருவேங்கடமுடையான் வண்மையைச் சொன்னபடி.

மேலும் திருவேங்கடத்துக்கு வண்மையாவது ஆழ்வார்கள் அருளியபடியே *''சிந்து பூ மகிழும்''*, *''தெண்ணிறைச்சுனைநீர்''*, *''விண்தோய் சிகரம்''*, *''குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சிசை பாடும் வேங்கடம்''* என்றும், *''செங்கயல் திளைக்கும் சுனை''* என்றும், *''கோல்தேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலை''* என்றும் பலபடியாக இயற்கை அழகை அனுபவிப்பது காண்க. திருவேங்கடமுடையானுக்கு வண்மை யாவது *''செடியாய வல்வினை தீர்க்கும் திருமால்''* என்றும், *''ஒயும் மூப்பு பிறப்பிறப்புப் பிணி வீயுமாறு செய்வான் திருவேங்கடத்தாயன்''* என்றும், *''செடியார் வினைகள் தீர் மருந்து''* என்றும் ஆழ்வார்கள் அநுபவித்தது காணலாம். அத்தகைய பெருமை கொண்ட திருவேங்கடமுடையானிடம் பிள்ளை வரம் வேண்டிய பெற்றோர்களுக்கு வரப்பிரசாதமாகப் பிறந்தவர் பெரிய திருமலை நம்பியாவர். இது பற்றியே *''நம்பி திருவவதாரம் திருவேங்கடமுடையான் வரப்ரஸாதத்தாலே''* என்று பெரிய திருமுடி அடைவு கூறும்.

(அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடிதொழுவான்) அய்யன் – ஐயன் என்ற சொல் அய்யனாயிற்று. உயர்ந்தோன் என்று பொருள். ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரனார் யாமுனாசார்யர் என்னும் ஆளவந்தாராவர். ஆளவந்தாருக்கு ஸ்ரீயாவது அவர் மகிமையைக் கூறுவதாகும். ஆளவந்தாருக்கு மகிமையாவது எல்லா சாஸ்த்ரங்களாகிய கடலைக் கரை கண்டவராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்து எல்லா சாஸ்திரப் பொருள்களையும் பிரசாரம் – பிரவசனம் செய்து பரம வைதிக ஸித்தாந்தம் என்று அழைக்கப்படும் ஸ்ரீவைஷ்ணவ மதத்தை மேன்மேலும் தழைக்கச் செய்து கொண்டிருந்தவர்.

மேலும், அரங்கனை மங்களாசாசனம் செய்து கொண்டு அப்பெருமான் குணங்களை அனுபவிப்பதிலும் அவருக்கு தொண்டு செய்வதிலும் பற்றுடையவராக இருந்தது பற்றி ஸ்ரீஆளவந்தார் என்றவாறு. இவ்வாறு பெரிய பெருமாளை சேவித்துக் கொண்டு இருக்கிற காலத்திலே பெரிய திருமலை நம்பிகள் உள்ளிட்ட இருபது சீடர்கள் ஆளவந்தார் திருவடிகளைப் பற்றினார்கள். ஆளவந்தாரிடமிருந்து உபய வேதாந்தங்களின் கருத்தை நன்கு அறியப் பெற்றனர். பவிஷ்ய தாசார்யரைக் கண்டு பிடித்து தர்சன பிரசாரத்தை அவரிடம் ஒப்பிக்க வேண்டும் என்றும் ஆளவந்தாரின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஒரே குறிக்கோளை உடையவராயிருந்தனர். மேலும் பெரிய திருமலைநம்பி உள்ளிட்ட ஆளவந்தாருடைய ஐந்து சீடர்களை இராமாநுசருக்கு ஆசார்யர்களாகக் காட்டிக் கொடுத்தது ஆகும். அவர் அருள் பெற்றவர் ஆகையால் அடிதொழுவோன் என்றபடி.

வாழித்திருநாம உரை தொடரும்....



# ஜூன் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. பதவியில் உயர்வு கிட்டும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தெய்வத்தரிசனம் கிடைக்கும். ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். கணவன்–மனைவி பிரச்சனை தீரும். குழந்தைகள் ஆரோக்யம் பெறுவர். தாய்–தந்தையரால் அனுகூலம் உண்டு. புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக நல்ல யோகம் தரும் மாதமிது.

**ரிஷபம்**

குடும்பச்செலவுகள் அதிகமாகும். தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் உண்டு. குழந்தைகளின் கல்விச் செலவு அதிகமாகும். ஆரோக்யம் சரியாகும். தன லாபம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடும்போது பிறர் ஆலோசனைக் கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது. மாணவர் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பொதுவாக செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்**

தொழில் துறையில் நல்ல முன்னேற்றம், லாபம், வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. சகோதரர்களிடையே பூசல்கள் நீங்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உயர் கல்வி கிடைக்கும். தாய்–தந்தையரின் ஆரோக்யம் மேம்படும். நண்பர்கள்–உறவினர்கள் உதவி கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். லாப நோக்கத்துடன் தொழில் செய்து வெற்றி பெறும் மாதமிது.

**கடகம்**

தொழில் துறையில் மாற்றங்கள் இருக்கும். தோஷ பரிகாரங்களுக்கு ஏற்ற மாதமிது. மனைவியின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கணவன்–மனைவிக்குள் பூசல்கள் சரியாகும். நண்பர்கள்–உறவினர்களால் நன்மை உண்டு. தாயின் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழில் துறை விஸ்தரிப்பு செய்யலாம். மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெறுவர். நன்மையும் தீமையும் கலந்த மாதமிது.

**சிம்மம்**

தொழில் துறையில் எதிர்பார்த்த வெற்றியும், முன்னேற்றமும் உண்டு. திருஷ்டி அதிகமாகும். யாத்திரையால் நல்ல தெய்வ தரிசனம் கிட்டும். தாய் ஆரோக்யத்தில் மருத்துவ செலவுகள் இருந்தாலும் குழந்தைகள் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வேலை எதிர்பார்ப்பவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். பொதுவாக அதிக நன்மைகள் பெறும் மாதமிது.

**கன்னி**

உடல் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல ஆரோக்யமும், தொழில் துறையில் நல்ல லாபமும் உண்டு. கொடுக்கல்–வாங்கலில் எச்சரிக்கை தேவை. முடிந்தவரை கடன் கொடுப்பதை தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதம் உண்டாகும். அஜீரணம் ஏற்படும் உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மின்னணு, மின்சாரப் பொருட்கள் பழுதாகும். பொதுவாக ஆரோக்ய விஷயத்திலும், பண விஷயத்திலும் எச்சரிக்கை தேவை.

**துலாம்**

பயணங்கள் வெற்றியைக் கொடுக்கும். கணவன்–மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். திருமணம் கைகூடும். குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக இருக்கும். பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். தந்தையின் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். தொழில் விஷயத்தில் எடுத்த காரியங்கள் வெற்றியைத் தரும்.

**விருச்சிகம்**

பணவிஷயத்தில் மிகவும் எச்சரிக்கை தேவை. கடன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தாய்க்கு மூட்டு வலி அதிகமாகும். பிறரால் பிரச்சனை ஏற்பட்டு பின் சரியாகும். பூர்வீகச் சொத்துக்களைப் பற்றி பேசாமல் இருப்பது நன்று. தொழில் துறையில் அலைச்சல், தூக்கமின்மை உண்டு. படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். எச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலம்.

**தனசு**

யாத்திரைகள் நன்கு அமையும். தொழில் துறையில் முயற்சியால் சாதிக்கலாம். தொழிலை விருத்தி செய்வீர். பூமி வாங்கும்–விற்கும் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. சகோதர வகையில் சிறு பிரச்சனைகள் உண்டாகும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்கள் பெறுவர். திருமணமாகாதவர்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும். மொத்தத்தில் நல்ல மாதம்.

**மகரம்**

தொழிலில் இருந்த தடைகள் விலகும். பணியாளர்களால் நன்மை உண்டு. ஆரோக்யம் உண்டு. புதிய முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள் நல் மதிப்பெண் பெறுவர். குடும்ப விஷயத்தில் பிரச்சனைகள் தீரும். நல்ல தரிசனம் கிட்டும். மனைவி, குழந்தைகளால் சந்தோஷம் உண்டு. தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். முயற்சியின் பேரில் வெற்றி பெறும் மாதமிது.

**கும்பம்**

தொழில் துறையில் வேலைப்பளு அதிகமாகும். தூக்கம் குறையும். குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்பட்டுப் பின் சரியாகும். ஆரோக்யத்தில் அக்கறை தேவை. காரியத்தில் முயற்சி இருந்தால் வெற்றி உண்டு. வீட்டில் பொருட்கள் பழுதாகும். தாயின் ஆரோக்யம் நன்றாக இருக்கும். கடல் கடந்து செல்லும் யோகம் உண்டு. நன்மையும் தீமையும் கலந்த மாதம்.

**மீனம்**

தொழில் துறையில் தனலாபம் கிடைக்கும். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் கிட்டும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. திருமணம் கைகூடும். புதிய முயற்சிகள் வெற்றியைத் தரும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். பலவிதத்திலும் இருந்த மனக்குழப்பங்கள் தீரும். மாணவர்கள்நல்ல மதிப்பெண் பெறுவர். உயர்கல்வி கிடைக்கும். பலவிதத்திலும் நன்மைகள் பெறும் மாதமிது.

ஆயுர் வேதம்



# கழற்சிக்காய் மருத்துவ குணங்கள்




தெலுங்கு மூலம்:
டாக்டர். சி.மதுசூதன சர்மா,
9000761390.

தமிழாக்கம்:
திருமதி வி.உஷா,
திருப்பதி.




இயற்கை அன்னை அருளிய, மருத்துவ குணங்களை உடைய ஓர் காய் கழற்சிக்காய். இந்தக் காய் சாம்பல் நிறமுடைய ஓர் விதை. இக்காய் ஆயுர் வேத மருந்துக்கடைகளில் கிடைக்கப்பெறும் அற்புதமான மருத்துவகுணம் படைத்த காய்.

சமஸ்க்ருதத்தில் குபேராக்ஷா என்று அழைக் கப்படும் இக்காயை ஆங்கிலத்தில் பிபர்நெட் என் றும், இந்தியில் கண்டகரேஜா என்றும் அழைப்பர்.

சிசால்பநேசி எனும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்த இதன் அறிவியல் பெயர் சிசால் பீணியா (பாண்டு). இம்மருந்து பல வகையில் மக்களுக்கு உதவுகிறது இதைப்பற்றி அறிந்து கொள்வோம்.

### ஆண்களின் விரைவீக்கம் வலி குறைய

கழற்சிக்காய் விதைப்பொடி 10 கிராம், விளக் கெண்ணெய் 50 மி.லி. ஆகியவற்றை கலந்து நிறம் மாறும் வரை சூடு செய்து இறக்கி, ஒரு பாட்டிலில் வைத்து, நாள்தோறும் விதைப்பையின் மேல் தடவி வந்தால் வீக்கம், வலி போன்றவை குறையும்.

### சளி, இருமல் குறைய

கழற்சிக்காய் பொடி, திப்பிலிப் பொடி ஆகிய வற்றை 10 கிராம் எடுத்துக் கொண்டு, நாள்தோறும் காலை 1–2 கிராமுடன் தேவையான தேன் கலந்து உட்கொண்டால் சளி, இருமல் குறையும். (இதனை வயிற்றிற்கு எடுத்துக் கொள்ளும் போது இக்காயை சிறு துண்டுகளாக்கி நெய்யுடன் சேர்த்து வதக்கி பொடி செய்து கொள்ள வேண்டும்.)

### மூலவியாதி குறைய

கழற்சிக்காய் பொடியைத் தகுந்தளவு கற்றாழைச் சாறுடன் கலந்து நன்கு அரைத்து, சிறு உருண்டையாக செய்து நிழலில் காய வைத்து, நாள்தோறும் மூன்று வேளை உணவு உண்டபின் மாத்திரையைப் போன்று சாப்பிட்டு வந்தால் மூல வியாதி ,அதனால் உண்டாகும் வலி, எரிச்சல், அரிப்பு ஆகியவை குறையும்.

### சிறுநீரகக் கோளாறுகள் நீங்க

கழற்சிக்காய் பொடி 40 கிராம், மிளகுப்பொடி 10 கிராம், பெருங்காயத்தை நெய்யில் வதக்கிய பொடி 5 கிராம் ஆகியவற்றை நன்கு கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் 2 வேளை 1–2 கிராம் பொடியைத் தகுந்த அளவு தேனைச் சேர்த்து உட்கொண்டால் சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்.

### பற்பொடியாக

கழற்சிக்காயை நன்கு சுட்டு பொடி செய்து அதனுடன், கற்கண்டு பொடி ஆகியவற்றை சம அளவு சேர்த்து, நாள்தோறும் ஒரு முறை பற்பொடியாக

உபயோகித்தால், பல்வலி, வீக்கம், இரத்தம் வழிதல் ஆகியவை நீங்கும்.

**முழங்கால் வலி குறைய**

100 கிராம் வெள்ளைப்பூண்டை அரைத்து அதில் கழற்சிக்காய் பொடி 50 கிராம், தான்றிப்பொடி 50 கிராம் ஆகியவற்றை கலந்து நன்கு அரைத்துப் பட்டாணி அளவு உருண்டைகளாக செய்து, நிழலில் காய வைத்து, நாள்தோறும் காலை, மாலை வேளைகளில் ஒரு மாத்திரை வீதம் உட்கொண்டால் முழங்கால் வலி, தசை வலி, இடுப்பு வலி, தோள் வலி முதலியவை குறையும்.

**கருப்பையில் கட்டிகள் மற்றும் நீர் கட்டிகள் நீங்க**

நாள்தோறும் ஒன்று அல்லது இரண்டு முறை 200 மி.லி. நீரில் ஒரு கழற்சிக்காய் பொடி, சிறிதளவு சிறு குறிஞ்சன் பொடி (ஆயுர்வேதக் கடையில் கிடைக்கும்). 10 மிளகுப் பொடி ஆகியவற்றை 100 மி.லி. நீருடன் சேர்த்து கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி ஒரு டீஸ்பூன் அளவு தேன் கலந்து உட்கொண்டால் நன்மை உண் டாகும்.

**மாதவிலக்கின் போது ஏற்படும் வயிற்று வலி குறைய**

கழற்சிக்காய் பொடி, திப்பிலி, மிளகு, சுக்கு ஆகிய வற்றை சம அளவு எடுத்து, கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் இரண்டு வேளை 1 கிராம் பொடியை 50 மி.லி. நீரில் கலந்து உட்கொண்டால் இப்பிரச்சனை நீங்கும், மேலும் இவ்வேளையில் ஏற்படும் தலைவலி, இடுப்பு வலி, பசியின்மை ஆகியவையும் நீங்கும்.

**மலேரியா**

இப்பொடியை நாள்தோறும் 3 வேளை இதே அளவில் 50 மி.லி. மோருடன் கலந்து பருகினால் மலேரியா போன்ற காய்ச்சல்கள் நீங்கும். சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றைக் கொண்டு தயா ரிக்கும் பொடியை “திரிகடுகம்” என்றும் அழைப் பர். ஆயுர்வேத மருந்துக்கடையில் “திரிகடு சூர்ணம்” என்ற பெயரில் விற்கப்படுகிறது.

**தேள் கடிக்கு**

கழற்சிக்காயை நீருடன் நன்கு அரைத்து எடுத்து, தேள் கடித்த இடத்தில் பூசினால் விஷம் முறிந்து வலி குறையும்.

நடுவண் அரசின் ஆராய்ச்சி மையத்தினால் ஆய்வுகள் செய்து “மலேரியா'' காய்ச்சலை நீக்கும் மருந்து – ஆயுஷ் –64 இக்கழற்சிக்காயை உபயோகித்துள்ளனர்.

குபேராக்ஷாதிவடி, விஷமஜ்வரக்னிவடி என்ற ஆயுர் வேத மருந்துகள் தயாரிப்பிலும் இக்காயை பயன்படுத்தியுள்ளனர்.

## ஸப்தகிரி வினாடி வினா போட்டி எண்.9 ஏப்ரல் 2023 விடைகள்

1. சிவகுரு, ஆரியம்மாள்
2. பகீரதன்
3. மகம் நட்சத்திரம்
4. சௌனகாதி முனிவர்கள்
5. வராக அவதாரம்
6. திருமாலையாண்டான்
7. காஞ்சிரம்
8. சரஸ்வதி தேவி
9. துவய மந்திரம்
10. திருமங்கை ஆழ்வார்
11. திருஷ்டத்யும்னன்
12. எம்பெருமான்
13. மணவாளமாமுனிகள்
14. ஹேமன், சுக்லன்
15. அக்ஷய திருதியை




**போட்டி எண்.9ற்கான சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி ஆர்.ஹன்சினி பிரியா, சேலம்.
2. செல்வன் எம்.வேதாந்த், அடையார், சென்னை.
3. செல்வன் சிவநிதி, நாகர்கோயில்.



# பூரி என்னும் புண்ணிய பூமி

- திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.

இந்து சமயத்தில் குறிப்பிடத்தக்க வைணவ திவ்ய திருத்தலங்களில் ஒன்று ஒடிசா மாநிலத்தில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள பூரி ஜெகந்நாதர் ஆலயம். ஏறக்குறைய அனைத்து ஆலயங்களி லும் தேவிமார்களுடன் அருள்பாலிக்கும் ஸ்ரீகிருஷ்ணர் இங்கு ஸ்ரீஜெகன்நாத ஸ்வாமியாக தன் சகோதரி யான ஸ்ரீசுபத்திரை, சகோதரர் ஸ்ரீபலராமர் அருள் பாலிப்பது ஓர் சிறப்பான அம்சமாகும்.

இங்கு மூலவர்களான ஸ்ரீஜெகந்நாதர், ஸ்ரீபலராமர், ஸ்ரீசுபத்திரை தனித்தனியாக மூன்று திருத் தேர்களில் எழுந்தருளப்பண்ணி திருவலம் வரும் நிகழ்வே ரத யாத்திரைத் திருவிழா ஆகும். வருடத்திற்கு ஒருமுறை ஆடி பௌர்ணமி அன்று ரதயாத்திரை தொடங்கப்பட்டு ஒன்பது நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். இந்த தேர்த் திருவிழாவில் தேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் லக்ஷகணக்கில் பக்தர்கள் கலந்துக் கொண்டு இறையருள் பெறுகின்றனர். தேர்த்திருவிழாவானது 18 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, மஞ்சள் நிறத்தேரில் ஸ்ரீஜெகந்நாதரும், 16 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, பச்சை நிறத்தேரில் ஸ்ரீபலராமரும், 14 சக்கரங்கள் கொண்ட சிவப்பு, கருப்பு நிறத்தேரில் சுபத்ரா தேவியும் எழுந்தருள்வர்.

பூரி மன்னர் தேர்களுக்கு பூஜை செய்த பின்னர், தேரோடும் ரத்னவீதியைத் தங்கத் துடைப்பத்தால் சுத்தம் செய்தபின் முதலில் ஸ்ரீபலராமர் தேரும், அதனை தொடர்ந்து ஸ்ரீசுபத்ரை தேவியின் தேரும் புறப்படும். இறுதியாக ஸ்ரீஜெகந்நாதர் எழுந்தருளிய தேர் புறப்படும். குண்டிச்சா கோயில் என்பது இந்த ஜெகந்நாதர் ஆலயத்திலிருந்து 3 கி.மீ. தூரம் இருந் தாலும் தேர் செல்லும் பாதை முழுவதும் பக்தர்கள் அலைஅலையாக கூடியிருப்பதால் தேரோட்டம் நிதானமாக நடைபெறும். தேரின் வடத்தை தொட் டாலே நாம் செய்த பாவங்கள் எல்லாம் தொலைந்து விடும் என்பது நம்பிக்கை.

## சந்தன யாத்திரை

இந்த ரதயாத்திரைக்கு வருடாவருடம் புது தேர்களை வடிவமைப்பதற்கு சந்தன் யாத்திரா என்ற பெயரில் அக்ஷய திருதியை அன்று கட்டைகளை சேகரிக்கும் பணியைத் துவங்குவர். இந்த தேர் அமைக்கும் பணியில் ஆணிகள் பயன்படுத்துவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்நான யாத்திரை

ஸ்நான யாத்திரைஅல்லது ஸ்நான ஜாத்ரை என்று அழைக்கப்படும் இந்நிகழ்வு திருமஞ்சனம் ஆகும். தேர்த்திருவிழாவின் முதல் நிகழ்வான ஜெகந்நாதர், பலபத்ரர், சுபத்ரை, சுதர்சனர், மதன மோகனர் விக்கிரகங்களை ஆலயத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டு திருமஞ்சனம் விமர் சையாக நடத்தி மலர் மற்றும் துளசி தளத்தினால் அலங்காரம் செய்வர்.

## பூரி ஆலயத்தில் வியக்கவைக்கும் விஷயங்கள்

சுதர்சன சக்கரத்தின் மேல் பறக்கும் கொடி யானது காற்றின் திசைக்கு எதிர்மறையாக பறக்







கின்றது. ஒவ்வொரு நாளும் சுதர்சன சக்கரத்தின் மீது 20 அடி நீளமுள்ள முக்கோண வடிவில் இருக்கும் கொடியை மாற்ற வேண்டும் என்ற பண்டைய முறையின்படி ஒவ்வொரு நாளும் மாற்றப்படுகிறது. இவ்வாறு மாற்றவில்லை எனில் அசம்பாவிதங்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை நிலவி வருகிறது.

ஆலய சிகரத்தின் நிழலானது ஒருபொழுதும் கீழே விழுவதில்லை. இந்த கட்டிடக்கலையைப் பாராட்டத்தக்கது.

உலோகத்தாலான சுதர்சன சக்கரம் எவ்வித இயந்திர உதவியும் இன்றி மனித சக்தியால் மட்டும் எவ்வாறு பொறுத்தினர் என்பது ஆச்சரியமான விஷயமே! இந்த சக்கரத்தை எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் ஒரே விதமாகவே காணப்படுகிறது. இந்த தொழில்நுட்பமும் வியக்கத்தக்கதே!



இறைவனே மேலானவன். ஸ்ரீஹரிக்கு மேற்பட்டவர் யாரும் இல்லை என்ற தத்துவத்திற்கு இணங்கிய விதமாக இவ்வாலயத்தின் மேல் எந்த ஒரு பறவையும் பறப்பதில்லையாம். இதிலிருந்து ஸ்ரீஜெகந்நாதரே இந்த ஜெகத்தில் உயர்ந்தவர் என்பதை உணரலாம்.

ஆலயத்தில் சிம்ம வாயிலில் நுழைந்த உடனே அலைப்பறிக்கும் அலைகளின் சப்தமானது நம் செவிக்கு கேட்பதில்லை. ஆலயத்திலிருந்து வெளியே வந்தால் அதை திரும்ப உணரலாம்.


ஜெகந்நாதர் ஆலயத்தில் தயாராகும் பிரசாதங்கள் ஒரு பிடிக்கூட வீணாவது இல்லை. ஒவ்வொரு நாளும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையானது யாராலும் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனாலும் வரும் அனைத்து பக்தர்களுக்கும் சரிபோகும் விதமாக அன்றைய பிரசாதங்கள் இறைவனின் அருளாலே தயாரிக்கப்படுகின்றன.



ஏழு மண் பாண்டங்கள் ஒன்றின்மீது ஒன்று வைத்து பிரசாதம் சமைக்கும் போது மேலே வைக்கப்பட்ட மண்பாண்டங்களில் உள்ள உணவு முதலில் சமைக்கப்படுகிறது. அதற்கடுத்து ஆறாவது மண்பாண்டம். அவ்வாறு அடுப்பில் முதல் மண்பாத்திரத்தில் இருக்கும் உணவு இறுதியாக சமைத்து இறக்கப்படுகிறது. இந்நிகழ்வு மிகவும் ஆச்சரியப்பட வைக்கிறது.



இத்தகைய மகிமைகள் பல அடங்கிய இவ் வாலயத்தின் ரதயாத்திரையில் நாமும் கலந்து கொண்டு இறையருள் பெறலாம்.



# ஏகாதசி விரதம்
## புராண வரலாறுகளுடன்...

– திரு.கிருஷ்ண துளசி, சென்னை.

ஏகாதசி என்ற வடசொல்லிற்கு பதினொன்று என்று பொருள். இது வளர்பிறை தேய்பிறையில் வரும் 11 வது திதியைக் குறிக்கும். ஏகாதசி, துவாதசி என்ற இரு திதிகளுமே திருமாலுக்குரிய திதிகள் ஆகும். ஏகாதசி நாளில் உபவாசமிருந்து, இரவு உறக்கம் விடுத்து திருமாலை வழிபடுவோர் இம்மை மறுமைப் பலன்களைப் பெறுவர் என்று அறநூல்கள் கூறுகின்றன. ஆயுர்வேதமும் இம்முறையான உபவாசம் ஆரோக்கியத்திற்கும், அறிவுத் தெளிவிற்கும் இன்றியமையாதவை என்று கூறுகிறது. இந்த ஏகாதசி தோன்றிய விதம் சிறார்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் மிகவும் அழகாக சித்திரங்களுடன் சித்திரக் கதையாக இவ்விதழில் கொடுக்கப்பட்டுள்ளது.

**சயன ஏகாதசி (தேவசயனி)**

கண்ணன் யுதிட்டிரனுக்கு ஆடிமாத சுக்லபக்ஷ ஏகாதசியின் பெருமயைக் கூறினார். ஆடிமாத சுக்லபக்ஷ ஏகாதசிக்கு தேவசயனி என்று பெயர். இது பாபநாசினி, பவநாசினியும் கூட. இந்நோன்பினை அநுட்டிப்பார்க்கு வாஜபேயம் முதலிய பல யாக பலன் கிடைக்கும். ஆடி மாதத்திற்கு வாமனன் அதிதேவதை. வாமனனைத் தாமரை மலர்களால் பூஜித்தல் சிறப்பு. இதற்கு சயன ஏகாதசி என்றும் பெயர். புருஷோத்தமா! இம்மாதம் உறங்கத் தொடங்குகிறீர். மார்கழியில் விழிக்கிறீர். பூமியில் படுத்தீர். அரக்கனிடம் யாசித்தீர். இவற்றுக்கெல்லாம் பொருள் யாது? என்று தர்மன் வினவினான். கண்ணன் கூறலுற்றான். முன்பு திரேதாயுகத்தில் மாவலி என்ற அசுர வேந்தன் என்னிடத்தில் மிக்க பக்தி பூண்டு வந்தான். சிரத்தையுடன் யாகம் செய்தான். பரமாத்மாவான என்னை வேதருக்குகளைக் கொண்டு ஹோமம் செய்து என்னை மகிழ்வித்தான். நான் பஞ்சமி திதியில் தோன்றினேன். எனது வேததோஷத்தால் பலி சந்தோஷப்பட்டான். சுக்கிரன் தடுத்தும் நான் கேட்பதைக் கொடுக்க இசைந்தான். நான் மூவடி இரந்தேன். அந்த மூவடியில் ஈரடியால் விஸ்வரூபம் கொண்டு உலகங்களை அளந்தேன். விஸ்வரூபத்தைக் கூறுகிறேன். கேள்.

பூலோகத்தில் பாதங்களும், புவர்லோகத்தில் துடையும், ஸுவா லோகத்தில் ஹிருதயமும், தபோ லோகத்தில் கழுத்தும், சத்திய லோகத்தில் வாய் பாகமும் அதற்குமேல் (அண்டகடாசத்துக்கு மேல்) தலையும் இருக்கும்படியாக வளர்ந்தேன். கிரகங்களும் இந்திராதி தேவர்களும், நாகர், யக்ஷர், கின்னரர், சிம்புருஷர், கந்தர்வர், ஸித்தல் சாரனர் முதலிய எல்லாத் தேவர்களும், ஒவ்வொரு மூலையில் இருந்து கொண்டு ஸ்தோத்திரம் செய்தனர். மகாபலி வணக்கத்துடன் நின்றான். அவனுக்கு எனது சுகுமாரமான, மென்மையான திருவடிதானம் செய்து, தேவர்களும் விரும்பும்படியாக என்னால் நியமிக்கப்பட்ட பாதா


ளத்திற்கு அவனை, அவனைச் சார்ந்தவர்களுடன் அனுப்பி வைத்தேன். ஆடி மாத சுக்ல பக்ஷத்தில் என் வடிவமான ஏகாதசியின் ஒரு பாகம் பலியின் அருகிலும், மற்றொரு பாகம் பாற்கடலில் சேஷ சயனத்திலும் விளங்குகிறது. கார்த்திகை மாதம் வரை உறங்குகிறேன். இந்த நோன்பில் முயற்சி எடுத்துக் கொண்டு விரதமிருந்து நோற்பானாகில் எல்லா நலன்களையும் பெறுவான். நான் உறங்கும்பொழுது மனிதன் தரையில் படுக்க வேண்டும். இம் மாதத்திலேயே சாதுர்மாஸ்ய விரதம் தொடங்குகிறது. ஆவணியில் காய்கறிகளை விட வேண்டும். புராட்டாசியில் தயிரை விட வேண்டும். ஐப்பசியில் பாலை விட வேண்டும். கார்த்திகையில் ஈரிலை பொருளை விட வேண்டும். இப்படி இருப்பவர்களுக்கு அஸ்வ மேத யாக பலன் கிடைக்கும்.



### யோகினி ஏகாதசி

ஆடி மாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசிக்கு யோகினி என்று பெயர். கிடைத்தற்கரிய பொருள் கிடைப்பது யோகம் என்று சொல்லப் படும். அதுபோல் கிடைத்தற்கரிய பயன்களை அளிப்பதால் இந்த ஏகாதசி, யோகினி என்றழைக்கப்படுகிறது. இந்த ஏகாதசி எல்லா பலன்களையும் தரவல்லது. சம்சார பயத்தை நீக்கி, நல்லாற்று படுத்தி வீடுப்பேற்றினை அளிக்கவல்லது என்று கண்ணன் பயன்களைக் கூறி வரலாறு ஒன்றையும் கூறலானான்.

அளகாபுரிக்கு அசரன் குபேரன். அவனுடைய சேவகன் ஹேமமாலி குபேரனுடைய சிவ பூஜைக்கு மாநஸரோவரத்திலிருந்து தாமரை முதலிய புஷ்பங்களை தினந்தோறும் கொண்டு வந்து கொடுப்பான். அவனது மனைவி விசாலாக்ஷி பேரழகி. அவளிடத்தில் அவன் அளவு கடந்த ஆசை உடையவன். ஒருநாள் சிவ பூஜைக்காக தான் கொண்டு வந்த புஷ்பங்களை அவளுக்குச் சூட்டி இன்புற்றான். குபேரன் பூக்கள் வராததால்



சஞ்சலப்பட்டு ஏவலர்களை ஹேமமாலியின் இடத்திற்கு அனுப்பினான். அவர்கள் அவன் இப்பூக்களால் மனைவியை அலங் கரித்து, அவளோடு, ரமித்துக் கொண்டிருக்கிறான் என்று கூறினர். சினம் கொண்ட குபேரன் அவனை அழைத்து வரச் செய்து அவனி டம் “நீ தொழுநோயால் நெடுங்காலம் பீடிக்கப்பட்டு துன்பங்களை அனுபவிப்பாயாக” என்று சாபம் கொடுத்தான். தொழுநோய் ஹேமமாலியைப் பற்றிக் கொண்டது. தலை கீழாக இமயமலைச் சாரலில் வீழ்ந்தான். பகலில் வெப்பத்தால் வாட்டப்பட்டும், இரவில் தூக்கமின்றித் துன்புற்றும் வருந்தினான். ஒருநாள் அவன் மார்க்கண்டேய மகரிஷியை புண்யவசமாகச் சந்தித்தான். அவரடி வணங்கி தன் வரலாற்றைக் கூறினான். தனக்கு நல்வழி கிடைக்க வும், இந்த சாபம் நீங்கவும் ஓர் உபாயம் கூற வேண்டும் என்று வேண்டினான். ஆடிமாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசி அனுஷ்டித்து பேறு பெறுவாய் என்றார். கருணாமூர்த்தியான முனிவர் இவனிடம் இரக்கங் கொண்டு கூறி யதை அவனும் சிரத்தையுடன் அநுஷ்டித்துச் சாபம் நீங்கப் பெற்று தங்கத்தைப் போல் ஜ்வலிக்கின்ற தேஜஸ்ஸுடன் விளங்கினான். மீண்டும் அளகாபுரியை அடைந்து, குபேரனால் கௌரவிக்கப்பட்டான்.

*வரலாறு அறிவோம்...*

கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்ற இக்கதை எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டிய அவசிய மான ஒன்று. நேர்மையே சிறப்பு என்பதையும் இக்கதை எடுத்துரைக்கிறது.

அழகன் அன்பான சிறுவன். தந்தையற்ற அவனை அவனுடைய தாய் வளர்த்து வந்தார். அழகனிடம் அவனுடைய தாய் "எந்நிலையிலும், எச்சூழ்நிலையிலும் நேர்மை தவறக் கூடாது என்று அடிக்கடி கூறி வந்தார். இளம்பிள்ளையான அவனுடைய மனதில் அது பசுமரத்து ஆணி போல் பதிந்தது. அழகன் நிறைய படித்து வாழ்வில் நேர்வழியில் முன்னேறி தன்னுடைய அம்மாவை நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதை உறுதி மொழியாகக் கொண்டு அதன்படி செயல்பட்டுக் கொண்டிருந்தான். அழகன் எட்டாவது படிக்கும் போது அவனுடைய அம்மா காலமாகி விட்டார். அதனால் அழகன் தன்னுடைய மாமா வீட்டிற்குச் சென்றான். அழகனின் மாமாவோ, "அழகா, உன்னை கவனித்துக் கொள்ள போதிய வசதி என்னிடம் கிடையாது. ஆதலால் உன்னை படிக்க வைக்க இயலாது. நீ வேலைக்குச் சென்று உன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்" என்றார். "மாமா நானோ சிறுவன் எனக்கு யார் வேலை தருவார்கள்?" என்றான். எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் மளிகைக்கடை வைத்து இருக்கிறார். அவரிடம் உன்னைப் பற்றிக் கூறினேன். அவருடைய கடைக்கும் வேலைக்கு ஆள் தேவைப்படுகிறதாம். ஆதலால் உன்னை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதாகக் கூறியுள்ளார். நீ நாளை முதல் அவருடைய மளிகைக் கடைக்கு வேலைக்குச் செல்" என்றார் மாமா.

அழகனுக்கு மாமாவின் பேச்சு மிகவும் வருத்தமாக இருந்தது. இருந்தாலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்று எண்ணி மறுநாள் மளிகைக்கடையில் வேலைக்குச் சேர்ந்தான். கடைமுதலாளி அழகனுக்கு கடையின் விவரங்களை எடுத்துக்கூறி அவனுடைய வேலைகளையும் சொன்னார். அழகனும் மகிழ்ச்சியுடன் முதலாளி சொன்ன வேலைகளைச் செய்து வந்தான். ஒருநாள் முதலாளி திடீரென வெளியூர் செல்ல வேண்டியிருந்தது. அழகனிடம் கடைபொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அழகனும் நேர்மையாக நடந்து கொண்டு முதலாளி திரும்பி வந்ததும் கடையை கண்ணியமாக அவரிடம் ஒப்படைத்தான். அழகனின் நேர்மை மற்றும் வேலை செய்யும் விதம் முதலாளியை மிகவும் கவர்ந்தது. அழகனின் மாமாவிடம் அழகனின் நேர்மை மிகவும் பிடித்துவிட்டதாகவும், தான் இப்படி ஒரு ஆளைத்தான் தேடிக் கொண்டிருந்ததாகவும் கூறினார். அதனைக்கேட்ட மாமாவும் மிகவும் மகிழ்ந்தார்.

அழகனிடம் முதலாளி கூறியவற்றைச் சொல்லி "அழகா, உன்னுடைய முதலாளி மிகவும் உன்னை நம்புகிறார். ஆதலால் நீ கடையில் தனியாக இருக்கும் சமயத்தில் யாரும் பார்க்காதபோது எண்ணெய், பருப்பு உள்ளிட்ட வீட்டிற்குத் தேவையான மளிகை சாமான்களை நாளை முதல் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு வா. அவ்வாறு செய்தால் முதலாளி உன்னை கண்டுபிடிக்க மாட்டார் என்று கூறினார். அழகன் "மாமா பொருட்களை எடுக்கும்போது யாரும் என்னை கவனிக்க மாட்டார்கள். ஆனால் கடவுள் கவனித்துக் கொண்டிருப்பார். அம்மா என்னிடம் எந்நிலையிலும், எச்சூழ்நிலையிலும் நேர்மை தவறக்கூடாது என்று கூறியிருக்கிறார். ஆதலால் நான் பொருட்களை கடையில் இருந்து எடுத்து வரமாட்டேன்", என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டான். அழகனின் பதிலைக் கேட்டதும் மாமா, அழகா! என்னை மன்னித்து விடு. கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை மறந்து விட்டேன். நானும் இனிமேல் நேர்மையாக இருப்பேன் என்று கூறி அழகனை அணைத்துக் கொண்டார்.



# கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்



நீதிக்கதை


- திரு. பொ. பாலாஜி கணேஷ்,
சிதம்பரம், 98425 5084486213.


பல் சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...





### பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1. ஜூன் 21 | - | அ. நம்மாழ்வார் |
| 2. வாமனர் | - | ஆ. உஜ்ஜைனி |
| 3. விசாகம் | - | இ. கருடாத்ரி |
| 4. செவ்வாய் | - | ஈ. யோகா தினம் |
| 5. கருடன் | - | உ. மகாபலி |

1.ஈ, 2.உ, 3.அ, 4.ஆ, 5.இ.



### சுலோகம் அறிவோம்!

ஆனிரை மேய்க்க நீபோதி அரு
மருந்தாவதறியாய்
கானகமெல்லாம் திரிந்து உன்
கரிய திருமேனிவாட
பானையில்பாலைப்பருகிப் பற்
றாதாரெல்லாம்சிரிப்ப
தேனிலினியபிரானே!
செண்பகப் பூச்சூட்டவாராய்.


- பெரியாழ்வார்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

பலமாக்குவோம் இருந்து பயிற்சி நாம் யோக செய்து நம் நலமுடன் நாட்டை

யோக பயிற்சி செய்து நாம் நலமுடன் இருந்து நம் நாட்டை பலமாக்குவோம்.







### பாதையைக் கண்டுபிடி

ஸ்ரீராமநாம
தியானத்தில்
அமர்ந்து
இருக்கும்
பக்த அனுமனுக்கு
ஸ்ரீராமனின்
பாதக்கமலங்களை
அடைந்திட
வழிக்காட்டுங்கள்

### விடுகதை பகுதி...

1. கசக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிப்பான் அவன் யார்?
2. கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன?
3. மண்ணுக்குள்ளே இருப்பாள். மங்களகரமானவள். அவள் யார்?

1) கரும்பு,
2) பூசணிக்கொடி,
3)மஞ்சள்.

விடைவிடை (வினாடி வினா)

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-11

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. தி.தி.தே.வின் சிறு குழந்தைகள் இதய மருத்துவமனையின் பெயர்.........................................................
2. “மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்” பாடல் இடம் பெறும் நூல்..................................................
3. பெரிய திருமலை நம்பிகள் அவதரித்த மாதம் நட்சத்திரம்.............................................................................
4. திருவேங்கடவனிடம் மேகத்தை தூதுவிட்ட ஆழ்வார்....................................................................................
5. திருஅட்டபுயகரம் திவ்ய தேசம் தாயார்..................................................................................................................
6. வாமனருக்கு மூன்றடி நிலம் தானமளித்தவர் ........................................................................................................
7. “கற்பாதிராமபிரானை யல்லால் மற்றுங்கற்பரோ” என்று பாசுரமிட்டவர்...................................................
8. அங்காரகன் அவதரித்த தலம்......................................................................................................................................
9. தமிழ்நாட்டில் அமைந்துள்ள செவ்வாய் தலம்.........................................................................................................
10. இராமபிரானிடம் சரணடைந்த இராவணனின் தம்பி...............................................................................................
11. உலக யோகா தினம் கொண்டாடப்படும் நாள்..........................................................................................................
12. திருதராஷ்டிரனிடம் தன் தெய்வீகப் பார்வையால் நேரடியாகக் கூறியவன்..................................................
13. வைகுண்டத்திலிருந்து கருடாத்ரியைக் கொண்டு வந்தவர்.........................................................................
14. கஜேந்திர புஷ்கரணி அமைந்திருக்கும் திவ்ய தேசம்..........................................................................................
15. திருமலையில் ஜ்யேஷ்டாபிஷேகம் நடைபெறும் மாதம்........................................................................................



## போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.06.2023.

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

# இதில் பொருந்தாதது ஏது?



..............................


..............................



..............................


..............................

குறிப்பு : பூரி ஜெகந்நாதர் ஆலயம், யோகா, சாதுர்மாத ஏகாதசி, இசைக்கருவிகள் இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) மேகத்துடன் சூரியன்
2) வைணவரின் கையில் கடியம்
3) மண்டபம்
4) பூக்கூடை
5) பாறைகள்
6) பறவைகள்
7) பூ தொடுக்கும் வைணவர்

# ஏகாதசி

**சித்திரக் கதை**

கதை மூலம் :திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு.
சித்திரம் :திரு. கே.நாத்.

முராசுரனின் கொடுமைகளை பொறுக்க மாட்டாத தேவதைகள், பூதேவியுடன் சேர்ந்து பிரம்மதேவனை பிரார்த்தித்தனர்.




கருடன் மீதேறி விஷ்ணு யுத்தத்திற்கு வந்தார். முராசுரனுக்கும் விஷ்ணுவிற்குமிடையே பயங்கரமான யுத்தம் நடந்தது. விஷ்ணு...
மிகச் சோர்வடைந்து விட்டேன். எனக்கு இனி ஓய்வு வேண்டும்.
விஷ்ணு பதரிகாசரமத்திற்குச் சென்று ஒரு குகையில் ஓய்வெடுத்தார். அவரின் சரீரத்திலிருந்து அதிலோக சுந்தரி பிறந்தாள். முராசுரன் விஷ்ணுவைத் தேடி அங்கு வந்தான்.
ஸ்ரீஹரி எங்கே! பயந்து ஓடி ஒளிந்து விட்டாய்.
முராசுரனின் குரலைக் கேட்டு சுந்தரி திரும்பி நின்றாள். அவளின் பார்வையைக் கண்டவுடன் முராசுரன் எரிந்து சாம்பலானான்.
ஹா... ஹா...
விஷ்ணு சுந்தரிக்கு ஏகாதசி எனப் பெயர் சூட்டினார். விஷ்ணு சுந்தரியிடம்...
வரம் கேள்...
ஒவ்வொரு பக்ஷத்திலும் பதினொன்றாம் நாள் உபவாசம் இருப்பவர்களுக்கு வைகுண்டம் கிடைத்தல் வேண்டும். ஜெய் ஜெய் ஜெகன்நாதா!
அப்படியே தந்தருளினேன்!
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசிது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:

இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
0877-
2233333
2277777

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஒ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## சூடிக்களைந்த மலர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

### சித்திரப்படம் & சாவிச்சங்கிலி (உலர் மலர் தொழில்நுட்பத்தில்)










### அகர்பத்திகள் (சூடிக்களைந்த மலர்களால் தயாரிக்கப்பட்டவை)













மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்கள் 0877–2277777, 2233333

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-05-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

